விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 10 சனிக்கிழமை (26.09.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 281




## 26ஆயிரம் வீரர்களின் உயிர்த் தியாகத்தில்

# நாட்டை மீட்ட படையினரை

# போர்க் குற்றவாளிகளாக்க சதி!

## ஜனாதிபதி மகிந்த உரை



(கொழும்பு)

நாட்டினதும் ஆயுதப் படைகளினதும் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சி ஒன்று உள்நாட்டு மற்றும் அனைத்துலக ஊடகங்களில் ஒரு பகுதியினரால் திட்டமிட்ட முறையில் கூட்டாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றஞ் சாட்டியுள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் நலன்புரி முகாம்கள் அமைக்க ஐ.நா. உதவ வேண்டும்

### அமைச்சர் ரிசாட் பதியுதீன் கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் பருவப் பெயர்ச்சி மழைக் காலத்திற்கு முன்னதாக யாழ்ப்பாணம் மற் றும் மன்னார் ஆகிய இடங்களில் இடம் பெய ர்ந்த மக்களுக்கு இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட வேண்டுமென அரசாங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

தற்போது இலங்கைக்கு விஜயம் செய்தள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதி வோல்டர் கெலினிடம் மீள் குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் ரிசாட் பதியூதின் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய பிரதேசங்களில் இடைத்தங்கல் முகாம்களை அமைப்பதன் மூலம் காலநிலையிலிருந்து பாதுகாப்பு அடைவது மட்டுமன்றி எதிர்கால மீள் குடியேற்ற (14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட தீவகமக்கள் சொந்த இடங்களில் நேற்று குடியமர்த்தப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து நேற்று முன்தினம் அழைத்துவரப்பட்ட தீவகத்தைச் சேர்ந்த 77 குடும்பங்களைச் சேர்ந்த 607 பேரும் நேற்று அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ள தாக யாழ். மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

இதில் வேலணைக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்ட 122 குடும்பங்களைச் சேர்ந்த 356 பேரில் வேலணைப் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 112 குடும்பங்களைச் சேர்ந்த 326 பேர் சொந்த இடங்களில் நேற்று குடியமர்த்தப்பட்டதாக வேலணை பிரதேச செயலர் எம்.நந்தகோபாலன் தெரிவித்தார்.

அத்துடன் 10 குடும்பங்களைச் சேர்ந்த 30 பேர் அவர்களின் சொந்த இடமான நெடுந்தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாகவும் வேலணை பிரதேச செயலர் குறிப்பிட்டார்.

இதேவேளை நேற்று முன்தினம் காரை நகருக்கு அனுப்பிவைக்கப்பட்ட 77 குடும் பங்களைச் சேர்ந்த 251 பேரில் காரைநகரை சொந்த இடமாகக் கொண்ட 41 குடும்பங்களைச் சேர்ந்த (14ஆம் பக்கம் பார்க்க)

## அரசு தொடர்ந்து தவறுவிடுமாயின் அதிகாரத்தை கைப்பற்ற நேரிடும்

### மங்கள சமரவீர கூறுரை

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய அரசாங்கம் மக்களின் எண்ணங்களைக் கவனத்தில் கொள்ளாது அதனைத் தவறவிட்டுச் செயற்பட்டால் எதிர்க்கட்சியின் பொதுக் கூட்டமைப்பின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றப் போவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற சுதந்திரத்தின் மேடை பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பொதுக் கூட்டமைப்பிற்கு அதிகாரத் தைக் கைப்பற்றும் எவ்வித நோக்கமும் இல்லை.

நாட்டை சிறந்த வழிக்குக் கொண்டுவரும் நோக்கத்திற்காகவே அந்தக் கூட்டமைப்பு உருவாக்கப்படுகிறது. அத்துடன் எதிர்வரும் தேர்தலில் வெற்றிபெறவும் இயலுமை இருப்பதாக மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (ந-5)

## புலிகள் இணைவதை தடுப்பதே அரசின் வேலை

### பிரதமர் கருத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் ஒன்றிணைவதனைத் தடுப்பதே தற்சமயம் முக்கிய குறிக்கோளாக இருப்பதாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

நியூயோர்க் ஆசியான் தலைமை யகத்தில் நேற்று இடம்பெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அங்கு (14ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர் வதைபடும் போது உலகத் தமிழ் மாநாடு எதற்கு?

### கலைஞரிடம் ஜெயலலிதா கேள்வி





(சென்னை)

உலகில் உள்ள அனைத்துத் தமிழர்களும் தற்போது நிலைகுலைந்து போய் வேதனையில் இருக்கிறார்கள். அத்துடன் இலங்கையில் சொந்த மண்ணில் தமிழர்கள் அகதிகளாக முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளனர். இந் நிலையில் உலகத் தமிழ் மாநாடு எதற்கு?

இவ்வாறு அதிமுக பொதுச்செயலாளர் ஜெயலலிதா கேள்வி எழுப்பியுள்ளார். ஒன்ப தாவது உலகத் தமிழ் மாநாடு (02ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புத் துறையில் வெடிவிபத்து மூன்று இளைஞர்கள் படுகாயம்

### நேற்றிரவு சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைப் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற வெடி விபத்தில் 3 இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

அரியாலை-கொழும்புத்துறைப் பகுதியில் நேற்றிரவு 7 மணியளவில் உழவு இயந்திரத்தில் மண் ஏற்றிக் கொண்டு நீண்டகாலம் பயன்படுத்தப்படாத பாதை ஒன்றின் ஊடாக வந்தபோதே வெடிபொருள் வெடித்ததில் மூவரும் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் கொழும்புத்துறைச் சேர்ந்த ஜே.ஜுட் வில்சன் (வயது 21), சி.சுஜிலதரன் (வயது 22) மற்றும் அரியாலை ஏ.பி.டி. வீதியைச் சேர்ந்த ரி.சயந்தன் (வயது 20) ஆகிய மூன்று இளைஞர்களுமே படுகாயமடைந்த நிலையில் நேற்றிரவு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-5)

### 28 ஆண்டுகளின் பின்

## இலவசப் பாடப்புத்தகம் ஏ-9 ஊடாக வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு 2010 கல்வியாண்டுக்கு தேவையான இலவசப் பாட நூல்களில் ஒரு தொகுதி நேற்று முன்தினம் ஏ-9 வீதியூடாக 14 லொறிகளில் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் எடுத்து வரப்பட்டது.

முதற்தடவையாக ஏ-9 தரைவழிப் பாதையூடாக 14 லொறிகளில் எடுத்துவரப்பட்ட 6 இலட்சம் பாடநூல்கள் நேற்றுக் காலை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் வைத்து கல்வி வெளியீட்டுத் திணைக்கள பிரதி ஆணையாளர் ஜி.என்.சில்வாவினால் யாழ்.மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரத் தினத்திடம் கையளிக் கப்பட்டது.

கல்வி (14ஆம் பக்கம் பார்க்க)

# உடுவில் மகளிர் கல்லூரி விவகாரம் அமைச்சர் டக்ளஸ் நேரில் சென்று அறிவார்

(யாழ்ப்பாணம்)

சமூகத்தில் பாதிக்கப்படும் ஒரு தரப்பினர் தமது நியாயமான கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காகப் போராடும்போது அவர்களுக்காகக் குரல் கொடுப்பது எனது பொதுவான குணாம்சமாகுமென ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

உடுவில் மகளிர் கல்லூரியின் ஆசிரியர்களும் மாணவர்களும் நேற்று மாலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்தனர். இச்சந்திப்பின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் உள்ளக் குமுறல்களையும் ஆதங்கங்களையும் நன்கு உணர்ந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாளை ஞாயிற்றுக்கிழமை உடுவில் மகளிர் கல்லூரிக்கு விஜயம் செய்து இப்பிரச்சினைக்கு நியாயமானதொரு நடைமுறை சாத்தியமான தீர்வை பெற்றுத் தருவதாகவும் அதுவரை பொறுமையுடன் இருக்குமாறும் அனைவரையும் கேட்டுக் கொண்டார்.

இந்நிலையில் உடுவில் மகளிர் கல்லூரி பிரச்சினை தொடர்பில் தீர்வொன்றை வழங்கும் முகமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாளை காலை 9 மணிக்கு மேற்படி கல்லூரிக்கு விஜயம் செய்யவுள்ளதால் ஆசிரியர்கள் மாணவிகள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், ஊர் பெரியவர்கள், சமூகப்பிரமுகர்கள் உட்பட அனைவரையும் மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அமைச்சர் அலுவலகம் கேட்டுள்ளது. (ந)

# தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்குத் தெரிவானோர் விபரம்

வட மாகாண பொதுச் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) வகுப்பு III/ பயிற்சித் தரம் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக இம்மாதம் 24 ஆம் திகதியன்று யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டோர் 01.10.2009 அன்று திருகோணமலையில் மாகாண பொது நிர்வாக செயலகத்தில் நியமனக் கடிதத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக நாளை மறுநாள் திங்கட்கிழமை பயணத்தினை மேற்கொள்ள அரசாங்க அதிபரினால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய ஆணையாளர் அறிவித்துள்ளார். தெரிவானோர் விபரம் வருமாறு,

எஸ்.சுரேந்திரன், கே.கோபிநாத், கே. பகீரதன், எஸ்.தர்சின்தன், கே.ஜெயன், ஏ.மயூரன், கே.ஏ.சிறிதரன், திருமதி கி.சாமினி, எம்.ஐ.டில்சான் தேவகுமார், பி.தனுஷன், எல்.தயாசீலன், எம்.யுவராசா,

ஏ.பி.போல் பகீரதன், கே.தவரூபன், கே. ஆதித்தன், ரி.இந்திரஜித், ரி.தனம்ஜெயன், ரி. தவரூபன், கே.யோகேஸ்வரன், எம்.மயூரன், எஸ்.தனுஷன், கே.செல்வகுமார். (ஓ)

## பட்டமேற் கல்வி டிப்ளோமா பெறுபேறு வெளியாகியது

திறந்த பல்கலைக்கழகத்தின் பட்ட மேற் கல்வி டிப்ளோமா 2007/2008 கல்வி ஆண்டுக்கான முதற் தேர்வு பரீட்சை முடிபுகள் வெளியாகியுள்ளன.

முடிபுகளை யாழ்.பிராந்திய நிலையத்தில் பார்வையிட முடியும் என இணைப்பாளர் எஸ்.கந்தவேள் அறிவித்துள்ளார். (ந-5)

## முதுமாணி கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 2010/2011 ஆம் கல்வியாண்டுக்கான ஆசிரிய முதுமாணி பட்ட கற்கை நெறி (M.A in Teacher Education) ஆரம்பமாகவுள்ளது.

இவற்றுக்குரிய விண்ணப்பப் படிவங்களை விண்ணப்ப முடிபுத் திகதிக்கு முன் யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிபுத் திகதி 06.10.2009. வருகை முன்னுரிமை அடிப்படையில் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும். மேலதிக விபரங்களை யாழ்ப்பாண பிராந்திய நிலைய அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம் என கற்கை நெறி இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ந-14)

# நாட்டை மீட்ட படையினரை...

திரித்துக் கூறப்படும் செய்திகளை வெளியிடுவதன் மூலமாகவும் திட்டமிடப்பட்டு மோசடியாகத் தயாரிக்கப்படும் ஒளி நாடாக்களை ஒளிபரப்புவதன் மூலமாகவும் எமது போர் வீரர்களை போர்க் குற்ற நீதிமன்றத்தின் முன்பாக கொண்டு செல்வதற்கான முயற்சிகளை இவர்கள் மேற்கொண்டுள்ளார்கள் எனவும் தென்மாகாணத்தில் இடம்பெற்ற பொது நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போது ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டின் நற்பெயரை அனைத்துலக ரீதியாகக் களங்கப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ள அரச சார்பற்ற அமைப்புக்களினால் சில தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்பட்ட மோசடி செய்யப்பட்ட ஒளிநாடா வழங்கப்பட்டது. ஊடக சுதந்திரத்தை அனுபவிக்கும் குறிப்பிட்ட சில ஊடகங்கள் அதனைப் பயன்படுத்தி தம்மைத் தாக்கி வருகின்றன.

நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் நிகழ்சிகளில் சிலவற்றில் பொய்யான கற்பனையைத் தவிர வேறுஎதுவும் இருப்பதில்லை. அரசை இழிவுப்படுத்துவதுமட்டுமே இவர்களின் ஒரேநோக்கமாக இருக்கின்றது.

ஒரு சில சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. அவற்றை அரசு மறுக்கவில்லை. இவை தொடர்பாக முழுமையான விசாரணைகளை நடத்தி அவற்றுக்குப் பொறுப்பானவர்களை சட்டத்தின் முன்பாகக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கின்றது.

ஜனாதிபதி என்ற முறையில் இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் இடம் பெறாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வசதிகளை சட்டத்தை நடைமுறைப் படுத்தும் அதிகாரிகளுக்கு நான் வழங்கியிருக்கின்றேன்.

கடந்த 30 வருடகாலமாக இந்த நாட்டில் காணப்பட்ட பயங்கரவாதத்தை முறியடிப்பதற்காக எமது படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளையிட்டு நான் திருப்தியடைகின்றேன். இவ்வாறான வெற்றிகளை மலர் படுக்கையிலிருந்து கொண்டு பெற்றுக் கொள்ள முடியாது. இந்த வெற்றிக்காக எமது மண்ணின் மைந்தர்களான 26 ஆயிரம் படையினர் தமது உயிர்களைத் தியாகம் செய்துள்ளார்கள். இன்னும் 50 ஆயிரம் படையினர் நிரந்தரமாக ஊனமடைந்திருக்கின்றார்கள்.

இந்த நாட்டின் நிலப் பகுதியில் மூன்றில் ஒரு பகுதியும், கடற்பரப்பில் மூன்றில் இரண்டு பகுதியும் பிரபாகரனின் கட்டுப்பாட்டிலேயே நீண்ட காலமாக இருந்தது. எமது படையினர் உயிர்த் தியாகங்களின் மூலமாக இதனை மீட்டுள்ளார்கள். இன்று இந்தப் போர் வீரர்களை போர்க் குற்றச்சாட்டுக்களுக்காக அனைத்துலக நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு சிலர் முயற்சிக்கின்றார்கள். இதற்கு நான் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை எனவும் மகிந்த தனது உரையில் தெரிவித்தார். (ந-5)

# தேசிய கல்வி நிறுவன கிளையை யாழில் அமைக்க நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தேசிய கல்வி நிறுவனத்தின் கிளை அலுவலகம் ஒன்றைத் திறக்கும் முயற்சியில் தான் ஈடுபட்டுள்ளதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வடக்கின் வசந்தம் 180 நாள் வேலைத் திட்டத்தில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் தேசிய கல்வி நிறுவனத்தால் நடத்தப்பட்ட உயர் தரக்கணித விஞ்ஞான பிரிவுகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கல்வி மறுசீரமைப்புத் தொடர்பான செயலமர்வு நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமானது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார். யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் இச் செயலமர்வு ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.

இரண்டாவது நாளாக இன்றும் நடைபெறும் இச் செயலமர்வில் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள், தேசிய கல்வி நிறுவக வளவாளர்கள் மற்றும் யாழ்.பாடசாலை உயர்தர கணித விஞ்ஞான பிரிவு ஆசிரியர்களும் கலந்து கொள்கின்றனர். (ந-5)

# ஈழத்தமிழர் வதைபடும்போது...

தொடர்பாக அதிமுக பொதுச்செயலாளர் ஜெயலலிதா நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்.

உலகில் உள்ள அனைத்துத் தமிழர்களும் தற்போது நிலைகுலைந்து போய் வேதனையில் இருக்கிறார்கள். 1966ஆம் ஆண்டு முதல் உலகத் தமிழ் மாநாட்டை நடத்திய மலேசிய தமிழர்கள் இன்று அந்த நாட்டின் இரண்டாந்தர குடிமக்களாக துன்பப்பட்டுக் கொண்டிருக்கி றார்கள்.

கடந்த ஆண்டு தங்களுடைய உணர்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் மலேசியத் தமிழர்கள் தெருக்களுக்கு வந்து தங்களது எதிர்ப்பைத் தெரிவித்த போது அந்நாட்டு அரசாங்கத்தால் கொடூரமாக அடக்கப்பட்டனர். இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக கருணாநிதி குரல் எழுப்பவில்லை.

1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்திய இலங்கைத் தமிழர்கள் இன்று தங்கள் சொந்த மண்ணிலேயே அகதிகள் முகாம்களில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இலங் கையில் இனப் படுகொலை நடந்து கொண்டிருந்த போதும் கூட கருணாநிதி குரல் கொடுக்க வில்லை.

இந்தச் சூழ் நிலையில் உலகத் தமிழ் மாநாடு எதற்கு? 2010 ஜனவரியில் ஒன்பதாவது உலகத் தமிழ் மாநாட்டை கோவையில் நடத்தப் போவதாக முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

இந்த உலகத் தமிழ் மாநாடு கருணாநிதியை உயர்த்திக் கொள்வதற்காக அறிவிக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சியே தவிர இதனால் தமிழ் மொழிக்கோ தமிழனுக்கோ எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார். (ந-5)


COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

ஒருவாரகால முழுநேரகற்கைநெறிகள்.

Diploma in Graphic Designing
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள மென்பொருட்களான
Adobe Photo shop+Corel Draw
Macro Media Flash+Cool 3D Studio

Diploma in Hardware Engineering
Assembling+Upgrading+Troubleshooting+Repairing
Servicing+Software Installation+Config Networking Ect..

Diploma in Video Editing
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள மென்பொருட்களான
Adobe Photoshop+Cool 3D Studio+VCD cutter
Capturing+Pinnacle Studio+Adobe premeir
ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்
Free Study Pack & CD's
ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்
வகுப்புக்கள் ஆரம்பம்:- 28.09.2009 - 09AM
(C-3377)



மணமகன் தேவை

வடமராட்சி இந்து வேளாளர் 1இல் செவ்வாய் 38 கிரகபாவம் அச்சுவினி 3 ஆம் பாதம் 1983 இல் பிறந்த BA.Hons. பட்டதாரி மணமகளுக்குத் தகுந்த வெளிநாட்டு மணமகன் தேவை. ஐரோப்பிய நாடுகள் விரும்பத்தக்கது.

மேலதிக தொடர்புகளுக்கு,
077 7033325
சனி, ஞாயிறு, விடுமுறையில் மட் டும் தொடர்பு கொள்ளவும்.
(C-3374)



கார் விற்பனைக்குண்டு

நல்ல நிலையிலுள்ள வெள்ளை நிற NISSAN SUNNY JAPAN கார் விற்பனைக்குண்டு.
13 ஸ்ரீ XXXX. தொடர்புக்கு,
077 7033325, 021 226 4143
சனி, ஞாயிறு, விடுமுறையில் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
(C-3373)



MIS கணனிக்கல்வி நிறுவனம்
BIT
For BIT 3rd year students
Final Year Project
VB.Net & SQL Server
Project Supervision
Mr.R.Kumaran - B.Sc. (Computing & IS)
Starts on 26/09/09 Sat & Sun - 9.00 am
TPNO :- 0213216083 - 0776577359
# 74, (3577)


# நல்லூர் பிரதேச சபை

## பொது அறிவித்தல்

**01.** நல்லூர் பிரதேச சபை தனது மக்களுக்கு சேவைகளை வழங்கும் பொருட்டு ஆயுர்வேத வைத்தியசாலை, கலாசார மண்டபம் என்பவற்றை நிறுவும் நோக்குடன் பின்வரும் ஆதனங்களைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது. அவ்வாதனங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் பொதுமக்கள் யாரும் ஈடுபட வேண்டாம் என அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(அ) இல.360, இருபாலை வீதி, கோண்டாவில்
(ஆ) இல.14/2, கருவப்புலம் வீதி, கொக்குவில்
(இ) இல.14/3, கருவப்புலம் வீதி, கொக்குவில்
(ஈ) இல.18/5, கருவப்புலம் வீதி, கொக்குவில்

**02.** மேலும், எமது சபை எல்லைக்குள் நிரந்தர கட்டடங்கள் மற்றும் எல்லைச் சுவர்களை அமைக்கும் போது சபையின் முன்னனுமதி பெறப்பட வேண்டும். அனுமதியின்றிக் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வோர் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாவருக்கும் அறியத் தரப்படுகின்றது. இதுவே நல்லூர் பிரதேச சபையால் வழங்கப்படும் சட்டப்படியான இறுதி அறிவித்தலாகும்.

எனவே அனுமதியின்றி கட்டடிங்களைக் கட்டுபவர்களுக்கு முன்னறிவித்தல் எதுவும் வழங்காமலே நேரடியாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறியத் தரப் படுகின்றது.

மே.சாந்தசீலன்,
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

25.09.2009

(C-3380)

# இன்று ஒரு தகவல்

## இராவணன் மீது சனியின் பார்வை

''சனியைப் போலக் கொடுப்பவனும் இல்லை! சனியைப் போலக் கெடுப்பவனும் இல்லை!'' என்று ஜோதிடர்கள் சொல்வார்கள்.

நாம் ஏதாவது வம்பில் மாட்டிக் கொண்டால் "பிடித்தது சனி" என்கிறோம்.

என்னுடைய நண்பர் ஒருவர், ''இராவணன் எப்பேற்பட்ட வீரன்! அவனே சனியின் பார்வை பட்டதும் தானே சங்கடப்பட ஆரம்பித்தான்!'' என்று கூறினார்.

"அது எப்படி?" என்று கேட்டதற்கு அவர் விளக்கிய கதை இது.

இராவணன் நவக்கிரகங்களைப் பிடித்துக் கொண்டு வந்து தன்னுடைய சிம்மாசனத்தில் படிகளாகப் போட்டு வைத்தான். பாவம்! அந்த ஒன்பது நவக்கிரகங்களும் ஒவ்வொரு படியாகக் குப்புறப் படுத்துக் கிடந்தார்கள்.

இராவணன் ஒவ்வொரு தடவையும் இவர்களின் முதுகில் காலடி வைத்து ஏறித்தான் சிம்மாசனத்துக்குப் போவது வழக்கம்.

இவ்விதம் நடந்து கொண்டிருப்பது ஒரு சமயம் நாரதரின் கண்ணில் பட்டுவிட்டது.

சும்மா இருப்பாரா அவர்? "என்ன செய்யலாம்?'' என்று யோசித்து ஒரு முடிவோடு நேராக இராவணனிடம் சென்றார்.

''இராவணா? நீ நவக்கிரகங்களைப் பிடித்துக் கொண்டு வந்து உன் சிம்மாசனத்துக்குப் படிகளாகப் போட்டு வைத்திருக்கிறாய்... அது உன்னுடைய வீரத்தைக் காட்டுகிறது.

இருந்தாலும் நீ ஒரு விடயத்தை யோசித்துப் பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு தடவையும் நீ சிம்மாசனத்துக்குப் போகும் போது நவக்கிரகங்களின் முதுகில் நீ கால்வைத்து ஏறிப் போகிறாய்! அது உனக்குப் பெருமையில்லை! அவர்களின் மார்பில் கால்வைத்து ஏறிப்போக வேண்டும். அதுதான் உனக்குப் பெருமை!" என்றார்.

நாரதர் சொல்வது சரிதானே! என்று யோசித்தான் இராவணன்.

உடனே அவன் குப்புறக் கிடந்த நவக்கிரகங்களைத் திருப்பி மல்லாத்திப் போட்டான். அவர்கள் மார்பில் அடிவைத்து மேலே ஏறி சிம்மாசனத்தில் சென்று அமர்ந்தான்.

அவ்விதம் அவன் சென்று கொண்டிருந்த போது சனிபகவானின் பார்வை அவன் மேல் பட்டது.

அவ்வளவு தான்!

சூர்ப்பனகை இராவணனைத் தேடி வந்தாள். சீதையின் அழகைப் பற்றி அவனிடம் சொல்ல ஆரம்பித்தாள். உடனே விவகாரம் ஆரம்பமாகி விட்டது.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# ஆங்கிலத்தில் சிறந்த தொடர்பாடலை விருத்தி செய்ய அரிய வாய்ப்பு

தொடர்பாடல் எந்த மொழியாயினுஞ் சரி சிறப்பாக இருக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பு எல்லோரிடமும் குறிப்பாக வேலை கொடுப்பவர்களிடம் அதிகரித்து காணப்படுகின்றது. ஆங்கிலத்தில் சரளமாக உரையாட முடியவில்லையா? உங்களுக்கு வேலை இல்லை என கூறுங்காலம் அண்மித்து கொண்டிருக்கின்றது.

இது நாங்களாகவே எங்களுக்குள் விருத்தி செய்ய வேண்டிய திறமை (Skill) ஆகும். ஆங்கில மொழியில் சிறப்பாக உங்களால் உரையாட முடியுமாயின் உங்கள் வேலையை சிறப்பாக செய்யலாம். உங்களது தகுதியை உயர்த்திக் கொள்ளலாம். உங்களைப் பற்றி மற்றையவர்களிடையேயான மதிப்பும் உயரும்.

*என்னால் எப்படி பேசமுடியும்?*
*நான் பேசுவேனா?*
*ஆங்கிலத்தில் எப்படி பதிலளிக்க முடியும்?*

இவை போன்ற கேள்விகளுக்கு விடை தருகிறது Jaffna Toastmasters நீங்களாகவே சுயமாக, சுதந்திரமாக பேசிப் பழக, தவறுகளை திருத்திப் பேச, மற்றையவரை பார்த்துப் பேச கிடைத்திருக்கும் அரிய வாய்ப்பு Toastmaster International மூலமாக கிடைத்திருக்கின்றது.

நாமாகவே இணைந்து நாமாகவே முயற்சி செய்து நமது திறனை வளர்த்துக் கொள்ளும் அரிய நிகழ்ச்சித் திட்டம் இது. தொடரான பயிற்சிகளுக்குக்கூடாகவே சரளமாக ஆங்கிலத்தில் உரையாடும் அல்லது தொடர்பாடும் திறனை வளர்த்துக் கொள்ளலாம்.

ஆங்கில தொடர்பாடல் திறனை விருத்தி செய்வதற்கான இக்கருத்திட்டத்தில் அதிகாரிகள், ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என அனைவரும் தமக்கென அமைப்பினை உருவாக்கி, தொடர்ச்சியாக பயிற்சி செய்து பயனை அனுபவிக்கலாம். அர்ப்பணிப்புடன் பயிற்சி செய்யும் ஒவ்வொருவரையும் திறமையுள்ளவர்களாக மாற்றிவிடும் அதிசயம் இத்திட்டத்திற்குண்டு.

ஒருமுறை முயற்சித்துப் பாருங்கள் இத்திட்டத்தின் வலிமை தெரியும். நல்லதை உள்வாங்குவோம். நம்மை விருத்தி செய்வோம். நல்ல தேசமதை கட்டியெழுப்புவோம்.

பல மொழிகளில் பாண்டியத்தியம் பெற்றிருத்தல் பல்வேறு தொழில்களுக்கு விண்ணப்பிப்பதற்கு உறுதுணையாயிருக்கும். அதுவும் ஆங்கில மொழியில் சரளமாக உரையாட முடிந்தால் எவருமறியாத தற்துணிவு பிறந்து விடும்.

என்னால் ஆங்கிலத்தில் பேச முடியவில்லையே என ஏக்கப் பெருமூச்சு விடுபவரும், பல சந்தர்ப்பங்களில் வெட்கித் தலை குனிபவரும் சொல்ல விரும்பியதை மொழியின் தடையில் சொல்ல முடியாது மனம் புழுங்குபவருக்கும் இம்முறை மிகவும் பிரயோசனமானது.

"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" இதுபோன்றே "ஆங்கிலமும் நாப்பழக்கம்'' உங்கள் உரையாடலை ஆங்கிலத்தில் சிறப்பாக செய்திட கிடைத்தற்கரிய வாய்ப்பு இது.

நீங்களாகவே ஒன்று கூடி கவலை மறந்து, சுதந்திரமாக பேசி மகிழ்வுறும் தவறுகளை இனங்கண்டு திருத்திக் கொள்ளும் அரிய சந்தர்ப்பம் இது. பாடசாலைகளில் இம்முறையை பயன்படுத்தி மாணவர்களின் ஆங்கிலத்தில் உரையாடும் திறனை வளர்த்துக் கொள்ளலாம்.

மேலதிக விளக்கம் பெற பணிப்பாளர், தொழில் வழிகாட்டல் அலகு, யாழ்ப்பாண பல்கலைக்கழகம் எனும் முகவரியுடனோ அல்லது career @jfn.ac.lk எனும் மின் னஞ்சல் முகவரியுடனோ தொடர்பு கொள்ளலாம்.

கலாநிதி கு. மிகுந்தன்.

# நல்லூர் பிரதேச மட்ட கலை இலக்கிய போட்டி முடிவுகள்

நல்லூர் பிரதேச செயலகத்தால் 2008 ஆம் ஆண்டு நடத்தப் பெற்ற கலை இலக்கிய போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு.

**சிறுகதை ஆக்கம்**

**சிரேஷ்ட பிரிவு**

ர. மதுரன் (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), இரண்டாம் இடம் இருவர் - சி. கௌதமன் (யாழ். இந்துக்கல்லூரி) செ. சரண்யா (கனகரத்தினம்மத்தியமகாவித்தியாலயம்).

திறந்த போட்டி

அரியாலையூர் சி. சிவதாசன், ந. தர்சினி, ச. சுரேஸ்குமார்.

**கவிதை**

**கனிஷ்ட பிரிவு**

ஜெ. ஸ்ரீக்குமரன், அ. சங்கீதா (நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை), பி. ரோவல் ரட்ணசிறி (யாழ். இந்துக்கல்லூரி).

**சிரேஷ்டபிரிவு**

ம. துவாரகன் (யாழ். இந்துக்கல்லூரி), த. வஜிதா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) இருவர் மூன்றாமிடம் - சி. கஜேந்தினி, நி. சஜானா (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

திறந்த போட்டி

அரியாலையூர் சி. சிவதாசன், செ. பஞ்சநாதன், இ. சிறிகஜலக்சுமி.

**கட்டுரை ஆக்கம்**

**கனிஷ்ட பிரிவு**

ர. வித்தியசங்கர் (யாழ். இந்துக் கல்லூரி), ஆ. மெசிஞானரூபி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), மோ. தனுஷா (கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்).

சிரேஷ்ட பிரிவு

க. உசாந்தன் (யாழ். இந்துக் கல்லூரி) இருவர் இரண்டாமிடம் - ச. பிரசங்கா, நா. நாகநந்தினி (செங்குந்தா இந்துக் கல்லூரி)

**பாடலாக்கம்**

திறந்த போட்டி

முதலாமிடம் இருவர் - அரியாலையூர். சி. சிவதாசன், செ. பஞ்சநாதன். இ. ஸ்ரீகஜலக்சுமி. (ஓ-30)

# இராசி பலன்

*26.09.2009*
*(புரட்டாதி 10 சனிக்கிழமை)*
*அட்டமி பின்னிரவு 1.19 மணிவரை*
*மூலம் முன்னிரவு 9.12 மணிவரை*
*இராகுகாலம் 9.02-10.32 மணிவரை*
*சுபநேரம் 3.02-4.32 மணிவரை*
*இரண்டாம் புரட்டாதிச் சனி*
*அட்டமி - நவமி*

| | |
|---|---|
| மேடம் | புதிய திட்டமிடல், சரீரப் பிரயாசை, திடீர்பயணம், ரோகபயம். |
| இடபம் | ஆரோக்கியக்குறைவு, எதிர்பாராத பகை, முயற்சி தாமதம், தனவிரயம். |
| மிதுனம் | மனோதைரியம், முயற்சி பலிதம், போசன சுகம், நண்பர்கள் உதவி. |
| கடகம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி, தேகநலன், போசன சுகம். |
| சிங்கம் | தாழ்ந்த சுபாவம், சிறுவியாதி, காரிய இடையூறு, தனவிரயம். |
| கன்னி | தொழில் சிந்தை, உறவினர் சந்திப்பு, சுபசெலவு, மனச்சஞ்சலம். |
| துலாம் | மாதர்நட்பு, நற்கீர்த்தி, காரிய அனுகூலம், விருந்துபசாரம். |
| விருச்சிகம் | கௌரவக்குறைவு, போசன சுகக் குறைவு, அதிக செலவு, முயற்சி தாமதம். |
| தனுசு | வெகுமானம், சயன சுகம், மாதர் நட்பு, நல்ல முயற்சி. |
| மகரம் | சோம்பல் நிலை, காரிய அலைச்சல், பிறருக்கு உதவுதல், சுப செலவு. |
| கும்பம் | நண்பர்கள் வருகை, காரிய நன்மை, பொருள் சேர்க்கை, நல்ல செய்தி. |
| மீனம் | அதிக பிரயாசை, தனவிரயம், இனிய சம்பவம், உடல் நலம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 85 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 30 |
| தக்காளி | 60 | 70 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 35 | 40 |
| கோவா | 80 | 100 | 100 |
| கரட் | 80 | 100 | 80 |
| பூசணி | 30 | 40 | 20 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 25 | 35 | 30 |
| சின்ன வெங்காயம் | 50-60 | 60 | 60 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 40 |
| பாகற்காய் | 60 | 70 | 60 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 30 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 60 | 80 | 60 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 |
| பீற்றூட் | 40 | 50 | 50 |
| கறிமிளகாய் | 30 | 50 | 40 |
| முருங்கைக்காய் | 110 | 120 | 120 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 15 |
| தேசிக்காய் | 240 | 240 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 45 |










28 ஆண்டுகளின் பின் ஏ-9 தரை வழிப் பாதையால் 15 லொறிகளில் யாழ்.மாவட்டப் பாடசாலைக்குத் தேவையான 6 இலட்சம் இலவசப் பாடநூல்கள் எடுத்துவரப்பட்டன. இவ்வாறு எடுத்துவரப்பட்ட பாடநூல்கள் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உதவி ஆணையாளர் ஜி.என். சில்வாவினால் யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினத்திடம் வைபவ ரீதியாக நேற்றுக் காலை யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட அதிகாரிகள், யாழ். இந்துக்கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா, ஆசிரியர்கள், வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் யாழ். இணைப்பாளர் எஸ்.நந்தகுமார் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும், கல்வி வெளியீட்டுத் திணைக்கள உதவி ஆணையாளர் இ.என்.சில்வா, யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம், பிரதி ஆணையாளர் லெனின் மதிவாணன் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதை முதல் நான்கு படங்களிலும், யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் கல்வி வெளியீட்டுத் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர். பாடநூல்களை உத்தியோகபூர்வமாக கையளிப்பதை அடுத்து வரும் படங்களிலும் காணலாம்.

### ஏ-9 வீதியூடாக சேவையில் ஈடுபட

# யாழ்ப்பாண லொறிகளுக்கு இதுவரை அனுமதி கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள லொறிகளை ஏ-9 வீதியூடாக சேவையில் ஈடுபடுத் துவதற்கு இதுவரை அனுமதி கிடைக்கவில்லை என யாழ் . வர்த்தகர்கள் கவலை வெளியிட்டுள் ளனர்.

இது தொடர்பில் யாழ். வர்த்தகர்கள் தெரி விக்கையில், கடந்த மார்ச் மாதம் முதல் ஏ-9 வீதியூடாக யாழ். மாவட்டத்திற்கான பொருட் களை எடுத்துவரும் நடவடிக்கை ஆரம்பமா னது.

எனினும் 6 மாதங்கள் கடந்த நிலையி லும் யாழ். மாவட்டத்தில் உள்ள லொறி களை ஏ-9 வீதியூடாக சேவையில் ஈடு படுத்த அனு மதி கிடைக்க வில்லை.

யாழ். மாவட்டத்தில் 200 இற்கும் மேற் பட்ட லொறிகள் ஏ-9 வீதியூடாக சேவையில் ஈடு படுத்துவதற்கு லொறி உரிமையாளர்கள் தயாராகவுள்ளனர்.

தற்பொழுது யாழ்ப்பாணத்திற்கு தேவை யான பெர்ருட்களை யாழ். வர்த்தகர்கள் கொழும்பிலுள்ள லொறிகளை வாடகைக்கு அமர்த்தியே எடுத்து வருகின்றனர். இதனால் 40 ஆயிரம் ரூபாவை மேலதிகமான லொ றிக் கட்டணமாக செலுத்த வேண்டியுள்ளது.

அத்துடன் அரசால் ஏற்கனவே அறிவிக் கப்பட்டதன் பிரகாரம் லொறி உரிமையாளர் கள் யாழ் .வணிகர் கழகத்தின் ஊடாக லொறி களைப் பதிவு செய்ததுடன் சாரதி உதவியாளர் ஆகியோருக்கு பொலிஸ் அனுமதியும் எடுக்கப் பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் யாழ். வணிகர் கழகத்தினர் உரியவர்களிடம் பல தடவைகள் கோரிக்கைவிடுத்தும் அனுமதிகிடைக்கவில்லை என யாழ். வர்த்தகர்கள் கவலை வெளியிட் டனர். (ந-5)

# சிவபூமி மன விருத்திப் பாடசாலையில் நவராத்திரி கலைவிழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலையின் வாணி விழா இன்று (26-10-2009) மாலை 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் சிவபூமி அறக்கட்டளைத் தலை வர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தலைமயில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் நல்லை ஆதின குரு முதல் வர் ஸ்ரீலஸ்ரீ சோமஸ்கந்த பரமாச்சாரிகள் சுவாமி ஆசியுரை வழங்குவதுடன் பிரதம விருந்தினராகஅமெ ரிக்க ஹவாய் சைவ ஆதீனத் தைச் சேர்ந்த ரிஷி தொண்டு நாதன் சுவாமி கள் சிறப்பு விருந் தினராக வடபிராந் திய சுகாதாரப் ப ணி ப் பா ள ர் வைத்திய கலா நிதி ஆ.கேதீஸ்வரன் தம்பதிகள் ,கௌரவ விருந் தினராக ஹற்றன் தேசிய வங்கியைச் சேர்ந்த ப.பிரகலாத் தம்பதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்புரைகளை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, சிவபூமி அறக்கட்டளை உப தலைவர் க.சிவாஜி ஆகியோர் வழங்கவுள் ளனர்.அத்துடன் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (ஓ-5)


சிவபூமி மன விருத்திப் பாடசாலை, கோண்டாவில்

நவராத்திரி கலைவிழா



காலம்:- 26.09.2009
(மாலை 3.00)
இடம் :- பாடசாலை மண்டபம்

தலைவர்
செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்
(தலைவர்-சிவபூமி அறக்கட்டளை)

ஆசியுரை
ஸ்ரீலஸ்ரீ .சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சரியர்
(முதல்வர் -நல்லை ஆதீனம்)

பிரதம விருந்தினர்
ரிஷி.தொண்டுநாதன் சுவாமிகள்
(ஹவாய் ஆதீனம்- அமெரிக்கா)

சிறப்பு விருந்தினர்
வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தம்பதிகள்
(வடபிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்)

கௌரவ விருந்தினர்
திரு.ப.பிரகலாத் தம்பதிகள்
(ஹற்றன் தேசிய வங்கி-யாழ்ப்பாணம்)

சிறப்புரை
பேராசிரியர் S.சிவலிங்கராஜா
(தலைவர் தமிழ்த்துறை யாழ்.பல்கலைக்கழகம்-யாழ்ப்பாணம்)

சிறப்புரை
திரு.க.சிவாஜி
(உப.தலைவர் -சிவபூமி அறக்கட்டளை)

- பிரதம விருந்தினர் உரை
- சிறப்பு விருந்தினர் உரை

கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

அறக்கட்டளையினர், அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், சிவபூமி பாடசாலை

(3578)


## நவராத்திரி விழாவும் வித்தியாரம்பமும்

நல்லூர் இளங்கலைஞர் மன் றத்தில் நவராத்திரி விழாவும் வித்தி யாரம்பமும் நாளை மறுதினம் திங்கட்கிழமை விஜயதசமி அன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெற வுள்ளது.

இந் நிகழ்வில் சக்தி வழிபாடு , வித்தியா ரம்பம் மற்றும் சிறப்பு இசை நிகழ்ச்சி ஆகியன இடம் பெறவுள்ளன.

அத்துடன் வாய்ப் பாட்டு , வயலின் ,வீணை, மிருதங் கம், பரதநாட்டியம் ஆகிய வகுப் புகளில் புதிதாகச் சேர விரும்பு வோருக்கு வித்தி யாரம்பமும் செய்து வைக்கப் படவுள்ளது. (ஓ-9)

# தேசப்படத்தொகுதி நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பொன். நந்தவர்மனின் தேசப்படத் தொகுதி நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் அதிபர் . கே. கே. யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார் மற்றும் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) இ. தமிழ்மாறன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் நூல் ஆய்வுரையை யாழ் . இந்துக்கல்லூரி புவியியல் ஆசிரியை திருமதி. சாந்தினி அருந்தவபாலன் வழங்கவுள்ளார். (6-9)

# விஜய நகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்

10

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

17 ஆம் நூற்றாண்டில் பக்தி மயமான பல நூல்களெழுதிய குமரகுருபரர் கோயில்களைப் பற்றி பல நூல்கள் எழுதியுள்ளார். இவரது படைப்புக்களில் குறிப்பிடத்தக்கவை முருகனைப்பற்றி ''கந்தர் கலிவெண்பா'' மதுரை சொக்கநாதரைப் பற்றிய " மதுரைக் கலம்பகம்" மதுரை மீனாட்சியம்மனைப் போற்றும், ''மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ்'', ''இரட்டை மணிமாலை'' திருவாரூர் கோயிலைப் பற்றிய "திருவாரூர் நான்மணி மாலை'' வைத்தீஸ்வரன் கோயில் பற்றிய "பிள்ளைத்தமிழ்" சிதம்பரச் செய்யுட் கோவை கலைமகளின் புகழ் பாடும் "சகலகலாவல்லிமாலை" போன்றனவாகும். பிறவியிலேயே ஊமையாயிருந்த இவருக்கு முருகன் அருளால் பேச்சாற்றலும் கவிபாடும் ஆற்றலும் வந்ததென்பர். ஸ்ரீ வைகுண்டத்தில் பிறந்த இவர் வட இந்தியாவில் சென்று மற்ற சமயத்தவர்களுடன் , குறிப்பாக இஸ்லாமியருடன் வாதிட்டு வென்றார்.

முகலாய்ப் பேரரசரைச் சந்தித்து பனராஸிஸ் ஒரு மடம் கட்டவும், கோயில் கட்டவும் நிலம் பெற்றார். இவரது சமகாலத்தவர் சிவப்பிரகாசர் என்பவராவார். இவர் கிறிஸ்தவர்களுடன் வாதிட்டு வென்றதாகவும், "ஏசுமத நிராகரணம்" என்ற நூலை இயற்றியதாகவும் கூறப்படுகிறது. ஆனால் இந்நூல் கிடைக்கப்பெறவில்லை.மதுரைவீரப்ப நாயக்க (1572-95) ரின் தளபதி திருவிருந்தானின் வேண்டுகோளின்படி அனாதாரி என்பவரால் "சுந்தர பாண்டியம்'' இயற்றப்பட்டது. வடமொழி பெயர்ப்பான இந்நூல் திருவிளையாடல் புராணத்தையொத்ததாகும்.

கச்சியப்ப சிவாச்சாரியார் என்பவர் (1625 இல்) ''கந்தபுராண''த்தை எழுதினார்.இது கம்பரது இராமாயணத்தை ஒத்திருப்பதோடு, வடமொழி ஸ்கந்தபுராணத்தைத் தழுவியதாகும். இவரது மற்ற நூல்களாவன, "திருக்கழுக்குன்றம் உலா", "திருவாரூர் உலா" போன்றவையாகும்.திருப்பூவனத்தில் கந்தசாமிப்

### விஜயநகர நாயக்கர் கால கலைப்படைப்புக்கள்



விஜயநகரம்- பத்ம மஹால் அந்தப்புரம்

புலவர் உள்ளூர் சிவன்கோயில் பற்றி உலாவும், திருவாப்பனூர் புராணமும் எழுதியுள்ளார்.

தஞ்சை இரகுநாத நாயக்கர் சிறந்த கவிஞராய் விளங்கினார். அவரது கற்பனைத் திறனுக்கும் புலமைக்ககும் எடுத்துக்காட்டாக "நளசரிதம்", "வால் மீகி சரிதம்", "கஜேந் திர மோட்சம்'' ஆகிய வற்றைக் கூறலாம். விசயராகவ நாயக் கரால் எழுதப்பட்ட ''இரகுநாத யுதயம் ''அவரது தந்தை இரகுநாத நாயக்கரின் செயல்திறனை விளக்கும் தெலுக்கு இலக்கியமாகும். ராச சூடாமணி தீட்சி தரால் எழுதப்பட்ட "ஆனந்த ராகவ நாடகம்" தஞ்சை நாயக்க மன்னர்களின் வம்சாவளிப் பட்டியலை அறிய உதவுகின்றது. தஞ்சையின் இரகுநாத நாயக்கர் ''சங்கீதசுதா'' என்ற நூலை எழுதிய கோவிந்த தீட்சிதரையும், "பாரிசாத அபஹரணம்" என்ற நூலை எழுதிய குமாரதட்டாச்சாரியார் என்பவரையும், "சாகித்தியரத்னாகரம்" என்ற நூலை எழுதிய யக்னநாராயண தீட்சிதர் என்பவரையும் ஆதரித்தார். தெலுங்கு, வட மொழி, தமிழ் ஆகிய மொழிகளில் வல்லுந ரான கோவிந்த தீட்சிதர் ''திருவையாறு மாத் மியம்'' என்ற நூலைத் தமிழில் மொழி பெயர்த்தார்.

வேலூரில் லிங்கம நாயக்கரின் சமகாலத்தவரான துறையூர் சிவப்பிரகாச சுவாமிகள் ஏராளமான தமிழ் நூல்களை இயற்றினார்.வட்டுவ ஆகமங்களைச் சார்ந்த சைவ தத்துவத்தையும், வீர சைவத்தின் தத்துவதையும், பெருமையையும் பரப்பினார். இவர் 218 பாடல்கள் அடங்கிய "அத்வைத வெண்பா'' வாலும், ''சதகத்ரய''த்தாலும் சைவத்தின் சிறப்பை உச்சிக்குக் கொண்டு

பேராசிரியர் கு. சேதுராமன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

சென்றார். இவரது சீடரான ஞானக்கூத்தர் ''விருத்தாசல புராண''த்தை எழுதினார். தஞ்சை மாவட்டத்தில் சூரியநாதர் கோயில் மடத்தினைச் சேர்ந்த நமச்சிவாச்சாரியார் சிவஞான போதத்திற்கு உரை எழுதியுள்ளார். வேலூர் சின்ன பொம்ம நாயக்கரால் போற்றப்பட்ட அப்பய்ய தீட்சிதர் அத்வைதக் கொள்கையைப் பரப்பினர். இவரது " பரிமளா'' என்ற நூல் சைவ, வைணவக் கொள்கைகளை விளக்குகின்றது. அப்பய்யதீட்சிதர் இயற்றியுள்ள அரிய நூல்களில் சில "சொற்கோப்புக்கலை'' பற்றியதாகும். (தொடரும்)

# ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் அடியார்க்கு அருளும் அன்னை சரஸ்வதி



இவள் பிரமனால் உருவாக்கப்பட்டுப் பின் அவனாலேயே மணக்கப்பட்டவள். கல்வியின் அதிதேவதை. இவள் வெள்ளை நிறமானவள். வெள்ளை நிற வஸ்திரம் கைகளில் ஜபமாலை, புத்தகம், வீணை, எழுத்தாணி தரித்து எழுந்தருளியிருப்பவள். இவளுக்குப் பிரம வித்தை முகமாகவும் நான்கு வேதமும் கரங்களாகவும் எண்ணும் எழுத்தும் இதிகாசங்கள் பாதங்களாகவும் ஓம்காரம் யாழாகவும் திகழ்கின்றன.

தன்னை சிருஷ்டித்த பிரமனே தன்னைக் கூட வருவது கண்டு மான்வடிவோடு அஞ்சியோட பிரமனும் ஆண் மானுருக்கொண்டு துரத்தியதாகவும் பின் சிவன் கருணையால் பிரமனையே கணவனாய்ப்பெற்றதாகவும் புராணங்கள் கூறுகின்றன. பிரமன் தன்னை நீக்கி யாகம் செய்தால் சரஸ்வதி என்னும் பெயரிலான நதியாகிப் பிரமனின் யாகத்தை அழிக்க வந்தவள். தன் நாயகனான பிரமனோடு கங்கையில் குளிக்கச்சென்ற போது ஓர் காந்தர்வன் பாடல்கேட்டு சரஸ்வதி தாமதிக்க , அவளை விட்டுச் சென்ற பிரமன் மற்றைய தேவியரோடு குளித்தது கண்டு இவள் கோபிக்க, உன் குற்றமுணராது கோபித்ததால் அட்சரவடிவாகிய நீ பூவுலகத்தில் 48 புலவருருவாகத் தோன்றிச் சிவனைப் பணிந்து அவன் தரும சங்கப்பலகையில் இருந்து வருக என சபிக்க அச் சாபமேற்று நடந்தவள்.

ஒருயாகத்தில் இவள் வரத் தாமதித்ததால் பிரமன் இடைக்குலக் கன்னிகை ஒருத்தியை தாரமாகப் பெற்றனன். அதனால் கோபங்கொண்டு தேவரை இவள் சபித்ததாய் வரலாறு.

ஒருமுறை இவளும் இலட்சுமியும் தம்முள் மாறுகொண்டு தங்களில் உயர்ந்தவள் யார் என்று பிரமனைக் கேட்கப் பிரமன் இலட்சுமியே என்றதனால் நதியாய் இவள் உருவெடுத்தனளாம்.

பிரமன் யாகம் செய்ய அந்த யாக கலசத்துள் தோன்றியவள். புலத்திய முனிவரை அரக்கனாகும்படி சபித்தவள். சரத்காலத்தில் பூஜிக்கப்படுவதால் சாரதை எனவும் பெயர் கொண்டவள்.தன்னைப் படைத்த பிரமன் மோகித்துக்கூறிய வார்த்தைகளால் கோபங்கொண்டு அங்ஙனம் மோக வார்த்தைகளைக் கூறிய பிரமனின் ஐந்துமுகங்களுள் ஒன்றினைச் சிவனை நீ பூசித்து அவனால் அறுபடுவாய் என சாபமிட்டவள். இவை அனைத்தும் சிவமகாபுராணம் சொல்லும் செய்திகள். இவளும் கங்கை,லக்ஷ்மி முதலியவர்களும் விஷ்ணு பத்தினிகள். ஒரு கால் விஷ்ணு கங்கையிடம் அதிக ஆசைகொண்டு அவளுடன் நகை முகமாயிருத்தலைக் கண்ட சரஸ்வதி, பொறாமை கொண்டு லக்ஷ்மியை நோக்க லக்ஷ்மி கங்கைக்கு சார்பாய் இருத்தலைக் கண்டு இவள் லக்ஷ்மியைச் சேடியாகவும் நதியாகவும் போகச் சபித்தாள். கங்கை சரஸ்வதியை நதி உருவமாகவென சபித்தாள். பின் சரஸ்வதி கங்கையை நோக்கி நீயும் நதி உருவாய் உலகத்தவரது பாவத்தைச் சுமக்க என்றனள். லக்ஷ்மி இதனால் தர்மஜ்வஜருக்கு குமரியாகி துளசியாகவும் பத்மாவதி எனவும் நதியாகவும் பிரவகித்தாள். லக்ஷ்மி சங்கசூடனை மணந்தனள். கங்கை சந்தனுவை மணந்தனள்.சரஸ்வதி பிரமபத்தினி ஆயினள். சரஸ்வதி பாரதவரிசத்தில் நதியாக வந்தபடியாள் பாரதி என்றும் பிரமனுக்கு பத்தினியாதலால் பிரம்மி என்றும் வாக்குகளுக்கு தேவியாதலால் வாணி என்றும் அக்கினியைப் போல் பாவத்தைக் கொளுத்தி யாவரும் காண மஞ்சணிறம் பெற்றிருத்தலின் சரஸ்வதி என்றும் அழைக்கப்படுகின்றனள்.இந்த மூன்றுதேவியரும் பூலோகத்தில் கலிவருஷம் ஐயாயிரம் சென்றபின் தங்கள் பதமடைவர் என்று தேவி பாகவதத்தில் கூறப்படுகின்றது.

### சரஸ்வதியின் அருள்பெற்ற அடியார்

ஊமைப்பிள்ளையாகப் பிறந்து முருகன் அருளால் அரியவரம் பெற்று பல அருள் நூல்களை இயற்றிய ஸ்ரீகுமரகுருபர·சுவாமிகள் காசியில் வசித்த முஸ்லிம் மன்னரை நேரில் சந்தித்து அளவளாவி இந்துசமுதாயத்தை நிலை நிறுத்த விரும்பி வட இந்திய பாஷைகளைக் கற்கக் கருதினார். அன்னை சரஸ்வதியைப் போற்றி சகலகலா வல்லி மாலையை இவர் பாட அம்மொழிகள் இவருக்கு இயல்பாயின. அதனால் அம்மன்னனிடம் பேசிக் காசியில் ஒரு மடத்தினை ஸ்தாபித்தார்.

### தேவி பாகவதத்தில் சரஸ்வதி

மூலப் பிரகிருதியான பராசக்தியிடமிருந்து தோன்றிய ஐந்து பிரதான சக்திகளில் சரஸ்வதியும் ஆகும். அம்மூலப் பிரகிருதியில் இருந்து தோன்றிய ராதாதேவியின் சக்தியின் நாக்குநுனியிலிருந்து வெண்ணிறம் கொண்டவளும் வெண்ணாடை தரித்தவளுமான இச் சரஸ்வதி தோன்றினாள் எனவும், இவள் படைத்தற் கடவுளான பிரமனுக்கு சக்தியாக கொடுக்கப்பட்டாள் என தேவி பாகவதம் கூறுகின்றது.

### அன்னை சரஸ்வதி அருளும் அறுபத்து நான்கு கலைகள்

அக்கர இலக்கணம், இலிகிதம், கணிதம்,வேதம், புராணம்,வியாகரணம், நீதிசாஸ்திரம், சோதிட சாஸ்திரம்,தர்மசாஸ்திரம், யோக சாஸ்திரம், மந்திர சாஸ்திரம், சகுன சாஸ்திரம், சிற்ப சாஸ்திரம்,வைத்திய சாஸ்திரம், உருவ சாஸ்திரம், இதிகாசம்,காவியம்,அலங்காரம் , மதுர பாடனம், நாடகம், நிருத்தம், சப்த பிரமம்,வீணை,வேணு, மிருதங்கம், தாளம், அத்திரபரீக்ஷை, கனக பரீக்ஷை, இரத பரீக்ஷை, கஜ பரீக்ஷை, அசுவ பரீக்ஷை, இரத்தின பரீக்ஷை, பூபரீக்ஷை, சங்கிராம இலக்கணம், மல்யத்தம், அகருஷணம், உச்சாடனம், வித்துவேஷணம், மதன சாஸ்திரம், மோகனம், வசீகரணம், இரசவாதம், காந்தர்வ வாதம், பைபீலவாகம், கௌத்துகவாதம், தாதுவாதம், காருடம்,நாட்டம், முட்டி, ஆகாயப் பிரவேசம், ஆகாயமனம், பாகாயப்பிரவேசம், அதிரிச்சயம், இந்திர ஜாலம், மகேந்திர ஜாலம், அக்கினித் தம்பம், ஜலஸ்தம்பம், வாயுத் தம்பம், திட்டித் தம்பம், வாக்குத் தம்பம், சுக்கிலத் தம்பம், கன்னகத் தம்பம், கட்கத் தம்பம், அவத்தைப் பிரயோகம்.

# புரட்டாதி மாதப் பலன்கள்

## சிங்கம்

(மகம், பூரம், உத்தராடம் 1 ஆம் பாதம் வரை)

**நல்ல காரியங்களுக்கு பிள்ளையார் சுழி போடுவதில் முதன்மையாக நிற்கும் சிங்க ராசி நேயர்களே!**

புரட்டாதி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது கூட்டுக் கிரக யோக அடிப்படையில் உங்கள் ராசி பலன் பெறுவதால் குடும்பத்தில் அமைதி கூடும். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறத் தொடங்கும். விரயாதிபதியும், தனாதிபதியும் இணைந்திருப்பதால் விரயத்திற்கு ஏற்ற பணம் வந்து கொண்டேயிருக்கும்.

ஜென்மச் சனி விலகிய பிறகு இதுவரை இருந்த சிக்கல்கள் மாறும். நண்பர்கள் பக்க பலமாக இருந்து ஒத்துழைப்புச் செய்வர். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். திடீர் இடமாற்றம், ஊர் மாற்றங்களை ஒரு சிலர் சந்திப்பர். மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும் பொழுது, சுய ஜாதகத்தை ஒரு முறை புரட்டிப் பாருங்கள். தெசாபுத்தி பலம் பெற்றிருந்தால் மாற்றங்களை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை.

இக்காலத்தில் சனீஸ்வர வழிபாட்டில் ஆர்வம் காட்டினால் சந்தோஷங்களைச் சந்திக்கலாம். என்ன இருந்தாலும் , உங்கள் ராசிநாதன் சூரியனுக்கு சனி பகைவன் என்பதால் அருகில் இருப்பவர்களை அனுசரித்து சென்றால் தான் ஆதாயத்தை அடைய முடியும்.

செப்டம்பர் 26 ஆம் திகதி கன்னி ராசியில் சனி சஞ்சரிக்கப் போகிறார். ஏழரைச் சனியில் இன்னும் இரண்டரை ஆண்டு காலம் இருக்கிறது. இந்தச் சனியை குடும்ப சனியாக கருதுவதால், குடும்பத்தில் இதுவரை இருந்த குழப்பங்களை அகற்றும். சுப காரிய தடைகள் விலகும். சொல்லை செயலாக்கி காட்ட முடியவில்லையே என்ற எண்ணம் மாறும். கொடுத்த வாக்கை இனி காப்பாற்ற இயலும். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். வாகன மாற்றம் உகந்ததாக அமையும்.

ஒக்டோபர் 2ஆம் திகதி கன்னி ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். தனாதிபதி தனஸ் தானத்தில் உச்சம் பெறும் இந்த நேரத்தில் பணப்புழக்கம் அதிகரிக்கும். வரவு, செலவுகளை வகைப்படுத்தி வருங்கால நலன் கருதி சேமிப்பில் ஈடுபடுவீர்கள். அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பர பொருட்கள் வரை வாங்கி மகிழ்வீர்கள்.

ஒக்டோபர் 7 ஆம் திகதி கடக ராசியில் செவ்வாய் நீச்சம் பெறுகிறார். 4,9 க்கு அதிபதி நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பெற்றோர் வழியில் ஆரோக்கிய பாதிப்புக்கள் ஏற்பட்டு அகலும். சொத்துக்களை வாங்கி விற்பதன் மூலம் ஆதாயம் கிட்டும். இருப்பினும் ,எதிர்பார்த்த அளவு லாபம் கிடைக்குமா? என்பது சந்தேகம் தான்.

ஒக்டோபர் 8 ஆம் திகதி மகர ராசியில் குரு வக்ர நிவர்த்தியாகிறார். ஒக்டோபர் 10 ஆம் திகதி கன்னி ராசியில் சுக்ரன் நீச்சம் பெறுகிறார். இதன் விளைவாக, எதிரிகளின் பலம் கூடும்.

கொடுக்கல், வாங்கல்களில் ஏமாற்றங்களை சந்திக்க நேரிடலாம். மற்றவர்களிடம் நம்பி ஒப்படைத்த பொறுப்பு மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம். வழிபாட்டின் மூலம் வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ள வேண்டிய நேரமிது.

இம்மாதம் வரவு அதிகரிக்கவும் வளர்ச்சி கூடவும் வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். துர்க்கை வழிபாட்டால் உங்கள் துயரங்கள் தீரும்.

## கன்னி

(உத்தராடம் 2, 3, 4 பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 பாதங்கள் வரை)

**பிறர் மனதை புண்படுத்தாத விதத்தில் பேசும் ஆற்றலைப் பெற்ற கன்னி ராசி நேயர்களே!**

புரட்டாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது வரப்போகிற ஜென்மச் சனியால் வளர்ச்சியில் சில இடையூறுகள் இருப்பதால் முன்கூட்டியே வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. விரய ஸ்தானத்தில் ராசிநாதனும், தனாதிபதியும், லாபாதிபதியும் சனியோடு இணைந்து சஞ்சரிப்பதால் எந்தக் காரியத்தையும் ஒரு முறைக்கு இரு முறை செய்யும் சூழ்நிலை உருவாகும்.

"போர் போட்டால் தண்ணீர் கிடைக்காது. போய் பார்த்தால் ஆள் இருக்காது". என்ன இது எதை தொட்டாலும் இப்படி இருக்கிறதே? என்று யோசிப்பீர்கள். இது போன்ற காலங்களில் நமக்கு நன்மைகள் நடக்க நாளும் வழிபாட்டில் ஆர்வம் காட்ட வேண்டும். குறிப்பாக ஏழரைச் சனி உங்களுக்கு இன்னும் ஐந்தாண்டுகள் இருக்கின்றது. முதல் இரண்டரை ஆண்டுகள் விரயச் சனியை தாண்டி விட்டீர்கள். இனி ஜென்மச் சனி. இது அந்தளவிற்கு பாதிக்காது என்றாலும் எதையும் முன் யோசனையுடன் செய்தால் மட்டுமே நன்மைகளை சந்திக்க இயலும்.

கன்னி ராசிக்குள் சனி செப்டம்பர் 26 ஆம் திகதி பிரவேசிக்கிறார். இந்த சனி பெயர்ச்சியால் பிள்ளைகள் வழியில் சுபகாரிய செலவுகளைச் சந்திக்கலாம். கடன் சுமை கூடினாலும் பழைய கடன்களை ஒரு வழியாக அடைத்து நிம்மதி காண்பீர்கள். எதிரிகளின் பலம் கூடும் இந்த நேரத்தில் எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்தால் வெற்றி கிடைக்கும். ஆரோக்கியத்தில் சிறு தொல்லைகள் வந்தாலும் அதை அலட்சியப்படுத்தக் கூடாது. அப்போதைக்கு அப்போது மருத்துவரிடம் ஆலோசனை பெற்று குணப்படுத்திக் கொண்டால், வியாதியும் முற்றாது விரயமும் கூடாது. சனி வழிபாட்டை முறையாக மேற்கொள்வதோடு குச்சானூர், திருநள்ளாறு, பெரிச்சிக் கோவில் போன்ற ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது.

ஒக்டோபர் 2 ஆம் திகதி கன்னி ராசியில் புதன் உச்சம் பெறப்போகிறார். எனவே, எதிர்பார்ப்புகள் நிறைவேறும். இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். பண வரவு திருப்தி தரும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

ஒக்டோபர் 7 ஆம் திகதி கடக ராசியில் செவ்வாய் நீச்சம் பெறுகிறார். அஷ்டமாதிபதி நீச்சம் பெறுவதால் சென்ற மாதத்தில் ஏற்பட்ட இழப்

### சிவல்புரி சிங்காரம்

புகளை இப்பொழுது ஈடு செய்வீர்கள். சிறு சிறு பிரச்சினைகளால் வந்த பகை அகலும். விற்காமல் கிடந்த பூமி விற்று லாபம் வரும்.

ஒக்டோபர் 8 இல் குரு வக்ர நிவர்த்தியாகிறார். ஒக்டோபர் 10 இல் கன்னி ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார் . எனவே இக்காலம் ஒரு பொற்காலமாகும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொகை வந்து கொண்டே இருக்கும். குருவின் பார்வை உங்கள் ராசியில் முழுமையாக பதிவதால் கல்யாணக் கனவுகளும் நனவாகும். கடல் தாண்டும் வாய்ப்புக்களும் கை கூடும். மணியான இக்காலத்தில் மகத்தான பலன்களை நீங்கள் காணலாம். குருவை வழிபட்டால் குதூகலம் கூடும்.

இம்மாதம் எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்க தென்முகக் கடவுளை இன்முகத்தோடு வழிபட்டு வாருங்கள். செல்வ நிலைஉயரும் .

(தொடரும்)

# வேதனம் அதிகரிக்கப்படும்போது ஓய்வூதிய கொடுப்பனவும் அதிகரிக்கப்படும்

### நாடாளுமன்றத்தில் சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

அரச பணியாளர்களின் வேதனம் அதிகரிக்கப்படும் சந்தர்ப்பங்களில் ஓய்வூதியக் கொடுப்பனவும் அதிகரிக்கப்படும் என பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை உரையாற்றிய அமைச்சர் சரத் அமுனுகம நாட்டுக்காக சிறப்பான சேவையைச் செய்துள்ள 4 இலட்சத்து 50 ஆயிரம் பேர் நாட்டில் இருக்கின்றார்கள் எனவும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது அரச துறையில் பணிபுரிந்தவர்களின் விகிதாசாரம் எமது நாட்டில் அதிகமானதாக உள்ளது எனவும் தெரிவித்தார்.

ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் காணப்படும் முரண்பாடுகளை 1995, 1997 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் அரசு தீர்த்து வைத்தது எனத் தெரிவித்திருக்கும் அமைச்சர் அமுனுகம தமது சேவையில் இருந்து ஓய்வு பெற்றுக்கொண்டவர்கள் இப்போது கணிசமான ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்கின்றார்கள் எனவும் குறிப்பிட்டார்.

இருந்த போதிலும் வேதன உயர்வு ஒன்று வழங்கப்படும் போது ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் முரண்பாடு ஏற்படுகின்றது. அதனால் இந்த முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான செயற்பாடுகளை வருடாந்தம் அரசு மேற்கொண்டு வருகின்றது எனவும் அமைச்சர் தெரிவித்தார். (ஓ-6)

# விதைகள் ஆராய்ச்சி ஆய்வுகூடம் அமைக்க உடன்படிக்கை

பயிர்ச் செய்கைக்கான விதைகள் ஆராய்ச்சி ஆய்வுகூடம் நிறுவும் சார்க் நாடுகளின் திட்டத்தின் கீழ் இலங்கையிலும் ஓர் ஆய்வுகூடத்தை அமைப்பதற்கு இந்திய அரசாங்கத்துடன் இலங்கை அரசு புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை விவசாய அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சர் மைத்திரி பால சிறிசேன சமர்ப்பித்திருந்தார். இத்திட்டத்துக்கு இந்திய அரசாங்கம் 7.7 மில்லியன் ரூபாவை இலங்கைக்கு வழங்குகிறது. (ஓ-6)

# யாழ். பயண அனுமதிக்கான அலுவலகத்தை வவுனியா நகரப்பகுதிக்கு மாற்ற இணக்கம்

(கொழும்பு)

வவுனியா ஈரப்பெரிய குளத்தில் கடந்த ஞாயிறு முதல் இயங்கத் தொடங்கியுள்ள யாழ். பயண பாஸ் வழங்கும் அலுவலத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க வவுனியா நகரப்பகுதிக்கு மாற்றுவதற்கு ஜனாதிபதியின் விசேட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னர் வவுனியா, கண்டிவீதி, ரம்மியா ஹவுஸ் இராணுவ அலுவலகத்தில் இயங்கி வந்த இந்த அலுவலகம் திடீரென ஈரப்பெரிய குளம் சோதனைச் சாவடி பகுதிக்கு மாற்றப்பட்டதையடுத்து, பயணிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

இந்த விடயம் குறித்து பாராளுமன்ற உறுப்பினரும் வடக்கின் வந்தம் திட்டத்தின் தலைவருமாகிய பசில் ராஜபக்ஷவுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பு புதனன்று பேச்சுக்கள் நடத்தியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பேச்சுவார்த்தைகளையடுத்தே அந்த அலுவலகத்தை வவுனியா நகரப் பகுதிக்கு மாற்றுவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வவுனியா அரசாங்க அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ள பசில் ராஜபக்ஷ பொருத்தமான ஒரு இடத்தைத் தெரிவு செய்து அது பற்றிய தகவல்களைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் இந்த அலுவலகத்திற்குரிய பொருத்தமான சில இடங்களை குறிப்பிட்டுள்ளதாகவும் அவற்றில் வைரவப் புளியங்குளம் சிறுவர்பூங்கா, பழைய வவுனியா தபாலகத்திற்கு அணித்தாக உள்ள பொழுது போக்கு மையம் என்பன சிலவாகும் என தெரிகின்றது.

இது குறித்து இராணுவ தரப்பினருடன் ஆலோசனைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(ஓ-6)

# புலிகளின் முக்கியஸ்தரொருவர் வவுனியா பொலிஸாரால் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ராதா படையணியைச் சேர்ந்த பிரபல புலி முக்கியஸ்தர் ஒருவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன் இவரால் மறைத்து வைக்கப்பட்டதாகக் கூறப்படும் சினைப்பர் ரக துப்பாக்கியொன்றும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், பளை பிரதேசத்திலிருந்து வவுனியாவுக்கு தப்பி வந்ததாகத் தெரிவிக்கப்படும் இந்த சந்தேக நபர் தொடர்பில் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலொன்றின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் தகவல் தருகையில் கூறியதாவது,

பளை பிரதேசத்திலிருந்து சினைப்பர் ரக துப்பாக்கியொன்றுடன் தப்பி வந்த மேற்படி சந்தேக நபர் அந்த துப்பாக்கியினை வேப்பம் குளம் பிரதேசத்தில் மறைத்து வைத்த நிலையிலேயே வவுனியாவுக்குள் உட்புகுந்துள்ளார்.

இந்நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்தே மேற்படி துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

உரிய விசாரணை களை அடுத்து அவரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

### பொங்கல் பண்டிகைக்கு முன்

# இலங்கை தமிழர் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் ஆர்ப்பாட்டம்



## இல.கணேசன் பேட்டி

(வேலூர்)

இலங்கை தமிழர் பிரச்சினையை பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக தீர்க்காவிட்டால் கோவையில் நடக்க உள்ள தமிழ் மாநாட்டின் போது பாரதீய ஜனதா சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று இல.கணேசன் தெரிவித்துள்ளார்.

வேலூர் ஓட்டேரியில், பாரதீய ஜனதா கட்சியின் உறுப்பினர் சேர்ப்பு தொடர்பான 7 மண்டல ஊழியர்களின் சந்திப்பு நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பாரதீய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் இல. கணேசன் கலந்து கொண்டு பேசினார்.

பின்னர் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

இலங்கையில் தமிழர்கள் மீதான பிரச்சினைகள் பற்றி ஆய்வு செய்ய ஆளுங்கட்சியின் கூட்டணியினரை கொண்ட குழுவை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து இருக்கிறார்கள். மக்களவையே அந்தக் குழுவை அமைக்க வேண்டும். அந்தக் குழுவில் தமிழக எம்.பி.க்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

இலங்கை இராணுவத்தினரால் தமிழகத்தை சேர்ந்த மீனவர்கள் தாக்கப்படுவதை தடுத்து நிறுத்துதல் உட்பட 8 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பாரதீய ஜனதா சார்பில் ஆர்ப்பாட்டம் நடக்க உள்ளது. வருகிற 29 ஆம் திகதி தஞ்சாவூரிலும் அக்டோபர் 6 ஆம் திகதி ராமேஸ்வரத்திலும் 8 ஆம் திகதி சேலத்திலும் 9 ஆம் திகதி சென்னையிலும் இந்த ஆர்ப்பாட்டம் நடக்கவுள்ளது.

உலகத்தமிழ் மாநாடு கோவையில் அடுத்த ஜனவரி 3 ஆவது வாரத்தில் நடத்தப்பட இருக்கிறது என்று தமிழக அரசு அறிவித்து உள்ளது. உலக தமிழர்களின் நலனை பற்றி அக்கறை எடுக்கும் மாநாடாக இது அமைய வேண்டும். வருகிற தைப்பொங்கல் பண்டிகைக்கு முன்னதாகவே இலங்கையில் உள்ள தமிழர்கள் அனைவரும் சொந்த குடியிருப்புகளில் குடியமர்த்தப்பட வேண்டும்.

வருகிற தைப்பொங்கலுக்கு முன்னதாக இலங்கை தமிழர் பிரச்சினையில் தீர்வு காணாவிட்டால் கோவையில் உலக் தமிழ் மாநாடு நடக்கின்ற இடத்தில் பா.ஜ.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். தமிழ் மாநாடும் தேவை, அதே சமயம் உலக தமிழர்களின் சுதந்திரமும் தேவை. அதற்கு தமிழக அரசு முயற்சி எடுத்தால் அதற்கு பா.ஜ.க ஒத்துழைப்பு கொடுக்க தயார் என இல. கணேசன் கூறினார். (ஓ-6)

# இலங்கை சிறையில் இருந்த 21 மீனவர்கள் விடுதலை

(இராமேஸ்வரம்)

இலங்கை சிறையில் இருந்த ராமேசுவரம் மீனவர்கள் 21 பேரை மன்னார் நீதிமன்றம் வியாழக்கிழமை விடுதலை செய்தது. செப்ரம்பர் 16 ஆம் திகதி ராமேஸ்வரத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் 21 பேரையும் 5 படகுகளையும் இலங்கை கடற்படையினர் செப்ரம்பர் 17 ஆம் திகதி கைது செய்து அனுராதபுரம் சிறையில் அடைத்தனர்.

இவர்களை மன்னார் நீதிமன்ற நீதிபதி அந்தோணிபிள்ளை சூட்சன் கடந்த வியாழக்கிழமை விடுதலை செய்து தலை மன்னாரில் உள்ள கடற்படை அதிகாரியிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

இதையடுத்து மீனவர்கள் படகுகளுடன் ஓரிரு நாள்களில் இந்தியக் கடலோர காவல் படை கப்பல் மூலம் மண்டபம் கரைக்கு வரவுள்ளதாக இந்திய இலங்கை நிரபராதி மீனவர்கள் விடுதலைக்கான கூட்டமைப்பு பிரதிநிதி யூ. அருளானந்தம் தெரிவித்தார். (ஓ-6)




# மீனவர்களின் பாதுகாப்புக்காக ஆயுதம் வழங்க கோரும் சுவரொட்டிகள்

(இராமேஸ்வரம்)

மீனவர்கள் பாதுகாப்பாக ஆயுதம் வழங்கக் கோரி இராமேஸ்வ்ரம் தீவுப்பகுதியில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் குறித்து புலனாய்வுத் துறையினர் விசாரித்து வருகின்றனர்.

இலங்கை கடற்படையின் தாக்குதலை கண்டித்து தமிழக மீனவர்கள் வேலை நிறுத்தம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். பல்வேறு அமைப்புகள் அரசியல் கட்சிகளும் கூட போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன.

மீனவர் பிரச்சினையை மையப்படுத்தி பல்வேறு தரப்பினரும் ஜனநாயக வழியில் போராட்டங்களில் ஈடுபட்டு வரும் நிலையில் மீனவர்களிடையே வன்முறையை தூண்டும் வகையில் மீனவர் பாதுகாப்புக்கு ஆயுதம் வழங்க வேண்டும் என அச்சடிக்கப்பட்ட சுவரொட்டிகள் இராமேஸ்வரம் தீவுப்பகுதியில் ஒட்டப்பட்டுள்ளன.

மீனவ மக்கள் கட்சி பெயரில் நகர் முழுவதும் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளில் மீனவர்கள் இந்திய குடிமக்களா இல்லையா என்ற கேள்வியுடன் இலங்கை கடற்படையினரின் தாக்குதல் நடவடிக்கையை தடுக்க நடவடிக்கை எடுக்காத மத்திய மாநில அரசுகளை கண்டிப்பதோடு மீனவர்கள் பாதுகாப்புக்காக ஆயுதம் வழங்க வேண்டும் என்பது போன்ற வாசகங்கள் உள்ளன.

இராமேஸ்வரம் மட்டுமன்றி மாவட்டத்தின் கடலோரப் பகுதி கிராமங்களிலும் இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. பொதுமக்களிடையே பரபரப்பை ஏற்படுத்திய இந்த சுவரொட்டி குறித்து புலனாய்வுத் துறையினர் விசாரித்து வருகின்றனர். (ஓ-6)

### திருவண்ணாமலையில்

# பட்டாசு வெடித்ததில் இருமாடிக் கட்டடம் தரைமட்டம்; 10 பேர் பலி



(திருவண்ணாமலை)

திருவண்ணாமலையில் பட்டாசு வெடித்ததில் இரு மாடிக்கட்டிடம் இடிந்து விழுந்தது. இதில் இடிபாடுகளில் சிக்கி 10 பேர் பரிதாபமாக இறந்தனர். அவர்களில் 4 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

திருவண்ணாமலை முகல் புறா தெருவைச் சேர்ந்தவர் பாபா பாய். ஜவுளி வியாபாரம் செய்து வருகிறார். இவர் தனது சொந்த வீட்டின் தரை தளத்தில் வசித்து வருகிறார். அதற்கு மேல் இரு மாடிக் கட்டிடங்களை வாடகைக்கு விட்டுள்ளார். இந்த இரு மாடியிலும் இரு குடும்பத்தை சேர்ந்த 15 பேர் வசித்து வந்தனர்.

பாபா பாய் ஆண்டுதோறும் தீபாவளி பண்டிகைக்கு பட்டாசுகள் வாங்கி வைத்து விற்பனை செய்வாராம். அதே போல் இந்த ஆண்டும் ஏராளமான தீபாவளி பட்டாசுகளை தன்னுடைய வீட்டில் வாங்கி வைத்து இருந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 9 மணி அளவில் பாபா பாய் வாங்கி வைத்திருந்த பட்டாசுகளில் தீப்படித்தது. இதனால் பயங்கர சத்தத்துடன் பட்டாசுகள் வெடித்து சிதறின. இதில் தரைதளமும் இருமாடிகளும் இடிந்து விழுந்து அந்த கட்டிடமே தரைமட்டமானது.

இதில் அந்த கட்டிடத்தில் இருந்த அனைவரும் கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கினர். இதுபற்றி தகவல் அறிந்ததும் திருவண்ணாமலை தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் 10 பேர் இடிபாடுகளுக்குள் சிக்கி பலியாகி விட்டதாக தெரியவந்துள்ளது. இரவு 10.45 மணி வரை 2 ஆண்களின் சடலங்கள் மற்றும் 2 ஆண் குழந்தைகளின் சடலங்களை மீட்பு குழுவினர் மீட்டுள்ளனர். அவர்கள் பெயர் விபரம் எதுவும் தெரியவில்லை.

கட்டிட இடிபாடுகளுக்குள் மேலும் பலர் சிக்கி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. அவர்களை மீட்கும் பணி நடந்து வருகிறது. (ஓ-6)

# என் உயிரை பற்றி கவலைப்படாமல் நயன்தாராவை திருமணம் செய்ய என்னிடம் அனுமதி கேட்கிறார்

### பிரபுதேவா மீது மனைவி மீண்டும் புகார்

(சென்னை)

நயன்தாராவை திருமணம் செய்ய என்னிடம் என் கணவர் அனுமதி கேட்கிறார். என்று பிரபுதேவாவின் மனைவி ரமலத் கூறினார்.

நடிகை நயன்தாராவுக்கும் நடிகர் இயக்குநர் பிரபு தேவாவுக்கும் காதல் இருந்து வருகிறது. இந்த நிலையில் பிரபுதேவாவின் மனைவி ரமலத் அளித்துள்ள பேட்டியில் நயன்தாராவின் மாயவலையில் இருந்து என்கணவர் விடுபட வேண்டும். அடுத்தவர் குடும்பத்தை கெடுப்பதை நயன்தாரா நிறுத்திக்கொள் ள வேண்டும். இல்லை யென்றால் அவரை அடிப்பேன் என்று கூறியிருந்தார்.

ரமலத்தின் பேட்டி சினிமா உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. நயன்தாரா அதிர்ச்சி அடைந்தார். கேரளாவில் நயன்தாராவுடன் வசித்து வந்த பிரபுதேவா மனைவி ரமலத்தை போனில் தொடர்பு கொண்டு கண்டித்தார். இது தொடர்பாக ரமலத் கூறியதாவது,

என்கணவர் பிரபுதேவா நயன்தாராவை திருமணம் செய்து கொள்வதற்கு என்னிடமே அனுமதி கேட்கிறார். என் உயிரை பற்றி அவர்கவலைப்படவில்லை. நயன்தாராவுக்கு தமிழ்நாட்டு தாய்மார்களும் சகோதரிகளும் பாடம் கற்றுக்கொடுப்பார்கள்.

தமிழகத்தில் உள்ள மாதர் சங்கத்தினர் என் கண்ணீரை துடைப்பார்கள். இதற்கு மேல் நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை. இவ்வாறு ரமலத் கூறினார். (ஓ-6)

# தமிழர்களின் நிலை குறித்து ஆராய நாடாளுமன்றக் குழு அனுப்பப்படும்

### காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கையில் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்புவதை இலங்கை அரசு முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இத்தகவலை காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ஜெயந்தி நடராஜன் டில்லியில் கடந்த வியாழக்கிழமை தெரிவித்தார்.

இலங்கை தமிழர்களை குடியமர்த்துவது தொடர்பாக நடவடிக்கை கோரி கடந்த இரு தினங்களுக்கு முன் தமிழகத்தைச் சேர்ந்த தி.மு.க மற்றும் காங்கிரஸ் எம்.பி.க்கள் அடங்கிய குழு பிரதமரைச் சந்தித்து மனு அளித்தது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிபுற்ற நிலையில் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழர்களின் நிலை குறித்து ஆராய நாடாளுமன்றக் குழுவை உடனடியாக இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என பிரதமரிடம் அவர்கள் வலியுறுத்தினர்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியையும் சந்தித்து இதே கோரிக்கையை அவர்கள் முன்வைத்தனர்.

இது தொடர்பாக உடனடி நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தமிழர்களின் நிலை குறித்து ஆராய நாடாளுமன்றக் குழு அனுப்பப்படும் என்றும் பிரதமர் தெரிவித்ததாக ஜெயந்தி நடராஜன் தெரிவித்தார். (ஓ-6)







சிறுவர்களுக்கான போசாக்கு மட்டத்தை உயர்த்தும் நோக்கில் இலங்கையில் முதற்தர பாற்பொருள் பொன்டேரா நிறுவனம் ஒரு தொகை அங்கர் பால்மாவகைகளை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் கையளித்தது.

இந்நிகழ்வில் பொன்டேரா நிறுவனத்தின் பொதுமுகாமையாளர் அச்சுரெட்டி யாழ். போதனா வைத்தியசாலையின் உதவிப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி கே.ராஜசேகரனுடன் கலந்துரையாடுவதையும், குழந்தைகள் வைத்திய நிபுணர் வாமதேவன் சித்திராவிடம் பால்மா வகைகளை கையளிப்பதையும், பொன்ளடேரா பிரான்ஸ்லங்கா லிமிட்டெட்டின் பிரதிநிதிகள் சிறுவர் நோயாளர் விடுதியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

## வாணி விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் யாழ்.நகரப் பணிமனையில் நாளை மறுநாள் திங்கட் கிழமை காலை 10 மணிக்கு மின் அத்தியட்சகர் ஏ.அருள்நாதன் தலைமையில் ஊழியர் நலன்புரிச் சங்கத்தால் கலைவாணி விழா விசேடபூசை வழிபாட்டுடன் நடைபெறவுள்ளது. (ஓ-39)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலய வாணி விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கம் தலைமையில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக தீவகக் கல்வி வலய விசேட கல்வி சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் கு.திருச்செல்வம் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக ஈழமக்கள் ஜனநாயக் கட்சி புங்குடுதீவு அமைப்பாளர் டி.றெக்சியன், இளைப்பாறிய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.தவராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் குழந்தைகளுக்கான வித்தியாரம்பமும் இடம்பெறவுள்ளது. (ஓ-9)

## பண்ணிசை சைவசித்தாந்தம் பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்ற அனுசரணையுடன் சிவதொண்டன் நிலையத் தேவாரப் பாடசாலையில் விஜய தசமி தினமான நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 4மணிக்கு தேவாரப்பண்ணிசை பயிற்சி வகுப்பும் சைவசித்தாந்த வகுப்பும் ஆரம்பமாகவுள்ளன.

இவ்வகுப்புகளில் பண்ணிசை வகுப்பு தேவார இசைமணி எஸ். ஆர் . திருஞான சம்பந்தர் ,சைவ சித்தாந்த வகுப்பு சைவப் புலவர் மு. திருஞானசம்பந்தப்பிள்ளை ஆகி யோரால் நடத்தப்படவுள்ளதுடன் இவ் வகுப்புக்கள் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் பிற்பகல் 4மணிமுதல் 6மணிவரை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4)

# போஷாக்கு தொடர்பான ஆய்வுகளுக்கு பொன்டேரா நிறுவனம் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

சிறுவர் போஷாக்கு மட்டத்தைக் கட்டியெழுப்பும ஆயுய்வுகளை ஊக்குவிக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மருத்தவ பீடத்திற்கு ஒரு மில்லியன் ரூபாயினை இலங்கையில் முதற்தர பாற்பொருள் பொன்டேரா நிறுவனம் அன்பளிப்பாக வழங்கியிருக்கின்றது. 1 தொடக்கம் 5 வயதிற்குட்பட்ட சிறுவர்களிடையே குறைபோஷாக்கு மற்றும் அதனுடன் தொடர்பான விடயங்கள் குறித்த ஆய்வுகளை மையமாகக் கொண்டே இந்த நிதி பொன்டேராவினால் வழங்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பல்கலைக்கழத்தில் இடம் பெற்ற வைபவம் ஒன்றின் போது இந் நிதியினை வழங்கினார்.

போஷாக்கின் அவசியத்தைக் கருத்திற் கொண்டு வழங்கப்பட்ட இந் நிதியளிப்பு சிறந்ததொரு உதவியாக அமைந்தது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கம் தெரிவித்தார். இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பொது முகாமையாளர் அச்யுட் ரெட்டி, போஷாக்கு தொடர்பான எமது முயற்சிகள் நிறுவனத்தின் நற்பெயரை உயர்த்துவ தற்கான முயற்சி மாத்திரமல்ல. இது சமூகத் தின் நலன் குறித்த ஒரு கடப்பாட்டின் வெளிப் பாடுமாகும்.

எமது முதன்நிலை வர்த்தகச் சின்னமான அங்கர், இந்த நாட்டின் சிறுவர்களையும் அவர்களின் குடும்பத்தினரையும் உயரிய போஷாக்கு மட்டத்தினை அடையச் செய்வதை நோக்கமாகக் கொண்டிருக்கின்றது.

நாம் பாற்பொருள் போஷாக்கினை கட்டியெழுப்புவது தொடர்பான எமது உதவிகளை தொடர்ந்தும் முன்னெடுக்கவிருக்கின்றோம். அதுமாத்திரமன்றி, ஆய்வுகளின் வாயிலாக சமூகத்திற்கு பங்களிப்புச் செய்யவும் முற்படுகின்றோம். இது போஷாக்குத் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டி அதன் வாயிலாக சகலரும் தமது ஆரோக்கிய மட்டத்தை கட்டியெழுப்பத் துணைபுரியும்.

குடும்ப போஷாக்குத் தொடர்பான நிபுணத்துவம் பெற்ற சர்வதேச நிபுணர்களின் வலைப்பின்னலைக் கொண்டது பொன்டேரா அங்கர் கல்லூரி. ஒவ்வொரு ஆண்டும் இலங்கையின் குடும்பப் போஷாக்கினை உயர்த்தும் பணிக்கு உதவும் ஆய்வாளர்களுக்கு ஆய்வு நிதியினை இவர்கள் வழங்குகின்றனர். அங்கர் இந்த ஆய்வு நிதியுடன் ஆறு மாதத்திற்குப் போதுமான அதிக போஷாக்கு நிறைந்த அங்கர் 1+ களை யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் உள்ள சிறுவர்களுக்கு வழங்குகின்றது.

இம்முயற்சி இப் பிரதேசத்தில் உள்ள இளம் நோயாளிகளின் போஷாக்கு விருத்திக்கு அதிக அக்கறையுடன் கூடிய பங்களிப்பு வழங்குவதாக அமையும் என்று நம்புகின்றேன் என்றார். (ஓ-6)

# 2007 ஆம் ஆண்டு வெளிவந்தவைகளில் சிறந்தவையாக தெரிவாகிய நூல்கள்

(யாழ்ப்பாணம்)

2007 ஆம் ஆண்டு வெவளிவந்த நூல்களில் சிறந்த நூல்களுக்கான தேர்வு முடிபுகள் வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் எட்டுத்துறைகளைச் சேர்ந்த 11 நூல்கள் போட்டிக்கு அனுப்பப்பட்டவைகளில் சிறந்த நூல்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு,

**இலக்கிய ஆய்வும் விமர்சனமும்** -"பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை" கலாநிதி செ.யோகராசா, **உயர் கல்வி** - "முகாமைநுட் பங்கள்" பேராசிரியர் மா.நடராஜசுந்தரம், **கவிதை** -"அந்தரத்து உலாவுகின்ற செய்தி" ஸ்ரீபிரசாந்தன், **சிறுகதை** -"இளவேனில் மீண்டும் வரும்" தாட்சியினி(பிறேமினி சபாரத்தினம்), **நாவல்** -"மீண்டும் வருவேன்" செங்கை ஆழியான், **நாடகம்**- "கல்லூரி நாடகங்கள்" பா.ரகுவரன்

**பல்துறை**

**கலைஇலக்கியம்** -"குருதிக் குளியல்" கலையார்வன் (கு.இராயப்பு), **வரலாறு** -"ஈழத்துத் தமிழ்ப்புலவர் வரலாறு" பண்டிதர் சி.அப்புத்துரை, **மருத்துவம்** -"நம்நாட்டு வைத்தியம்" டாக்டர்.எம்.ஏ.முகம்மது சரீப், **பொது** -"விடேச கல்வி அறிமுகமும் பிரயோகங்களும்" தம்பிராசா சிவகுமார்

**சிறுவர் இலக்கியம்** - "அனசன் கதைகள்"(மொழிபெயர்ப்பு) ரி.தர்மகுலசிங்கம் ஆகிய நூல்களே சிறந்த நூல்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (ஓ-9)

## இலக்கிய சந்திப்பும் கௌரவிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

அவை (Forum) ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அல்வாய் வடமேற்கு கலையகத்தில் இலக்கிய சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ளும் சாகித்யரத்னா கலாநிதி க.குணராசா "எனது எழுத்துகளும் இன்றைய எழுத்துகளும்" என்னும் விடயம் பற்றி கருத்துரை வழங்கவுள்ளார்.

அத்துடன் சாகித்யரத்னா விருது பெற்றமைக்காக கலாநிதி க.குணராசாவை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக கலாநிதி த.கலாமணி தெரிவித்துள்ளார்.(ஓ-4)

## தமிழ் இலக்கிய விழா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் நடத்தப்படும் தமிழ் இலக்கிய விழா ஒக்டோபர் மாதம் 8 , 9, 10 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளதாக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.

இவ்விழா ஒக்டோபர் மாதம் 2, 3, 4 ஆம் ஆகிய திகதிகளில் நடத்தப்படுவதாக இருந்து தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-9)

## செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்தில் தரம் 12 இல் பரதநடனம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய கலைத்திட்டம் தொடர்பான செயலமர்வு 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 8.30 மணி தொடக்கம் 16.30 மணிவரை நெல்லியடி ம.ம.வித்தியாலயத்திலுள்ள ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (ஓ-6-19)

## தொழில் முயற்சியாண்மை பயிற்சிநெறி ஆரம்பம்

நெக்டெப் ராப்-பீ நிதி அனுசரணையுடன் தொழித் துறைத் திணைக்களத்தினால் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 30 பயனாளிகளுக்கு தொழில் முயற்சியாண்மை விருத்தி பயிற்சிநெறி எதிர்வரும் 29 ஆம்திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக தொழில் துறை திணைக்கள மாவட்ட அலுவலர் பி.ராகவன் தெரிவித்துள்ளார். (ஓ-7)


**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

61, Kachcheri-Nallur Road, Jaffna

Phone: 021 2228093

E-mail: alliancejaffna@yahoo.com

**Learn French the French Way**
**French Classes**

Alliance Frenciaise de Jaffna இன் ஊடாக சர்வதேச மொழியான பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் உள்நாட்டு, வெளிநாட்டு விரிவுரையாளர்கள் மூலம் கற்பிக்கப்படுகின்றன.

மாணவர்கள், அலுவலர்கள், வெளிநாடுகளில் உயர்கல்வி கற்க விரும்புவோர், ஆசிரியர்கள் மொழி பயில ஆர்வமுள்ள எவரும் கற்கலாம்.

*வகுப்புக்கள் சனி, ஞாயிறுகளில்*

*புதிய பிரிவு மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.*

அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.

(3559)


# ஆளுநர் விருதுபெறும் துறைசார் வல்லுநர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலிருந்து 2008 ஆம் ஆண்டுக்கான துறைசார் வல்லுநர்களாக ஆளுநர் விருது பெறுவோரின் பெயர் விபரங்கள் வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளன.விபரங்கள் வருமாறு,

இராசு சுந்தரமூர்த்தி - இசைத்துறை, கந்தையா நாகப்பு- நாட்டுக்கூத்து துறை, வீ.சிவசுப்பிரமணியம் (ரமணி) - ஓவியத் துறை, கந்தையா நடேசு (தெணியான்)- கலை இலக்கியத்துறை, பி.பி.அந்தோனிப் பிள்ளை -சிறுவர் இலக்கியத்துறை, முத்தர் நடராசா (பாகவதர்)-இசை நாடகத்துறை, திருமதி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் - ஆய்வுத்துறை, ஆசை இராசையா- ஓவியத் துறை, லெ.கெங்காதரன் ஆச்சாரி-உலோகச் சிற்பத்துறை, எல்.திலகநாயகம் போல். (ஓ)

# படையினரின் செயற்பாடுகளை நியாயப்படுத்தும் முகமாகவே இலங்கை அரசு செயற்படுகின்றது

## கிருபாகரன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை அரசானது முழுமையாக படைகளிலேயே தங்கியிருப்பதால் படையினர் மீது தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை சர்வ சாதாரணமாக நிராகரித்து விடுகின்றது எனத் தெரிவித்திருக்கும் தமிழர் மனித உரிமைகள் மையத்தின் பொதுச் செயலாளர் ச.வி.கிருபாகரன் படையினரின் செயற்பாடுகளை நியாயப்படுத்தும் வகையிலேயே அரசு செயற்படுவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

ஜெனீவாவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொடங்கியுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 12 ஆவது கூட்டத் தொடருக்கு சமாந்தரமாக இடம்பெறும் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே கிருபாகரன் இவ்வாறு தெரிவித்தார்.

ஜெனீவாவைத் தளமாகக் கொண்டுள்ள அரச சார்பற்ற நிறுவனமான "Interfaith International" இதனை ஏற்பாடு செய்திருந்தது. இங்கு உரையாற்றிய கிருபாக ரன் மேலும் கூறியதாவது,

உண்மையான ஜனநாயக நாடு ஒன்றில் படைகளின் மீது குற்றச்சாட்டு சுமத்தப்படும் போது அது தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக குழுக்கள் நியமிக்கப்படுவதுடன், அந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஆராயப்படுகின்றது.

இந்த விசாரணைகளின் அடிப்படையில் குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்களை மறுக்கும் அல்லது ஏற்றுக் கொள்ளும் செயற்பாட்டை அரசு மேற் கொள்ளும். அத்துடன் குற்றவாளியகாகக் காணப்பட்டவருக்குத் தண்டனையும் வழங்கப்படும்.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில், அரசு முழுமையாகப் படைகளிலேயே தங்கியிருப்பதால் இவ்வாறு தெதரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் மிகவும் சாதாரணமாக நிராகரிக்கப்பட்டு விடுகின்றன. அத்துடன், படையினரின் செயற்பாடுகளை நியாயப்படுத்துகின்றன. அத்துடன், இந்தக் குற்றச்செயல்களுக்கப் பொறுப்பானவர்கள் எனக் கூறப்படுபவர்களை சந்தேகக் கண்களுன் பார்ப்பதற்குப் பதிலாக பாதிக்கப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுப்பவர்களையே சந்தேகக் கண்களுடன் பார்க்கும் நிலைதான் உள்ளது.

பிரித்தானிய ''சனல் -4' தொலைக்காட்சியில் ஒளிபரப்பான ஒளிநாடா இதற்கு சிறந்த உதாரணமாக இருக்கின்றது.

படையினரின் கொடூரங்களை அரசு மறைக்கும் அதேவேளையில் இவ்வாறு தண்டனையிலிருந்து விதி விலக்களிக்கப்படுவது ஆழமான காயங்களை ஏற்படுத்துகின்றது. இது இறுதியில் படை சதிப் புரட்சி போன்றவற்றுக்கக் காரணமாக அமையலாம் எனவும் கிருபாகரன் தனது உரையில் எச்சரிக்கை விடுத்தார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரும், மனித பாதுகாப்பும் என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டத்தில் இராஜதந்திரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஐ.நா. அதிகாரிகள் உட்பட பெரும் தொகையானவர்கள் கலந்துகொண்டனர்.

உலகின் பல பகுதிகளிலும் இருந்து வந்திருந்த பிரபல கல்விமான்கள், சட்டவல்லுநர்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இதில் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். (ஓ-6)

# கூட்டு வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டதால் அரசுக்கு வருடம் தோறும் 10 பில்.ரூபா இழப்பு

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு

அரசாங்கம் அத்தியாவசிய பொருட்களுக்கு கூட்டுவரிகளை அறிமுகப்படுத்தியதன் மூலமாக ஒருவருடத்திற்கு 10 பில்லியன் ரூபா அரசு வருமானத்தை இழந்துள்ளது என்று நிதி திட்டமிடல் பிரதி அமைச்சர் ரஞ்சித்சியம்பலா பிட்டிய தெரிவித்தார். பாராளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணைக்கு பதிலளித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் , அத்தியாவசியப் பொருட்கள் மீது கூட்டு வரிகள் அறிமுகப் படுத்தப்பட்டமையால் அரசாங்கம் வருடத்திற்கு 10 பில்லியன் ரூபாவை இழந்துள்ளது. பாராளுமன்றத்தில் வரிகளை அறிமுகப்படுத்துகின்றபோது அதற்கு அனுமதியளிக்காத எதிர்க்கட்சிகள் அவ் வரிகளை திருத்துமாறு இன்று கோருகின்றன.

வரிகள் தொடர்பில் அவதானத்தை செலுத்தாமல் சம்பிரதாய பூர்வமாக அதற்கு எதிராக கை உயர்த்தினர் என்பதால் இந்த விவாதத்தில் பிரயோசனம் இல்லை என்பதுடன் 2008 ஆம் ஆண்டு மேமாதம் 19 ஆம்திகதிக்குப் பின்னர் பொருளாதாரம் கட்டியெழுப் பப்படுகின்றது. கடந்த 30 வருடங்களாக் இருந்த பிரச்சினை க்கு தீர்வு கண்டுள்ளோம். அரசாங் கத்தின் ஆதாயத்தை 10,11,12 வீதங்களுக்குள் மட்டுப்படுத்தினோம் என்றார். (ஓ-6)




யாழ் நகரில்

முதன் முறையாக நம்பமுடியாத கட்டணக்கழிவில்

சர்வதேச கற்கை நெறிகள்

**Pre. MBA (9 Months)**

To whom பட்டதாரிகள், வர்த்தக வியாபார பட்டதாரி அல்லாதவர்கள், உயர் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் (HNDM, HNDA) முடித்தவர்கள்

இப்பாடநெறியினை முடித்தவர்கள் MBA கற்கை நெறியினைலண்டனில் முதற்தரம் வாய்ந்த பல்கலைக்கழகத்தில் தொடரமுடியும், 100 % விசா உத்தரவாதத்திற்கு நிறுவனமே பொறுப்பேற்கும்.

HND in Business Management - Edexcel
HND in Computing - Edexcel
HND in Quantity Survering - Edexcel

Duration 16 Months

**Access Programming (Foundation Degree Programme)**

O/L முடித்த மாணவர்களும் சர்வதேச பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கான முன்னோடிப் பாடநெறி Duration 6 Months

Admission requirements:
6 passes in G.C.E. (O/L) Examination

Admission requirements:
2 passes in G.C.E. (A/L) in any subject and 6 passes inclusive of two credit passes for Englsih and Mathematics in G.C.E (O/L) examination or Successful completion of BCHS Access programming.

Foundation Dip in Hospitality management Duration 6 Months
IELTS Duration 6 Months
Executive Secretary Diploma Duration 6 Months

அனைத்துப் பாடநெறிகளுக்குமான புதியபிரிவுகள் ஆரம்பிக்கப்படுகின்றன

Batch 2 26.09.2009 Batch 3 30.09.2009

Diploma in English
Advance Diploma in English
Duration 6 Months

மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்கள் உயர்கல்வியினை இலகுவாக பூர்த்தி செய்யவும் சரளமாக ஆங்கிலத்தில் உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் தயாரிக்கப்பட்டுள்ளது.

எமது நிறுவனத்தில் கற்று வெளியேறும் மாணவர்களுக்கு 100 % Students Visa பெற்றுக் கொள்வதற்கு அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளால் உத்தரவாதம் வழங்கப்படும்

C-3365

**BCHS**

No.15, Sirambiyadi Lane,
Off Stanley Road, Jaffna.
HotLines: 0773501499 / 0777222422 / 0714299935
021 2224550
Email: info@bchs.lk


# நவராத்திரி பாமாலை



## உன்னைப்போல என்னையும் உருவாக்கு

உன்னைப் போல் என்னையும் உருவாக்கு
உலகை வெல்லும் வழிகாட்டி உருவாக்கு
மண்ணில் கல்வியால் உயர்ந்த மகளாக
மானிலம் போற்றும் தலைவியாக என்னையும் உருவாக்கு
எண்ணிய செயல்முடிக்கும் தமிழிச்சியாய்
எங்கும் எதிலும் ஏற்றமுடன் துலங்க என்னை உருவாக்கு
வண்ணக்கலைமகளே !வாணியம்மா தாயே
வரமிதனைத் தந்தெம்மை வழிகாட்ட வேண்டுமம்மா

அ.மதுரகலாவித்தியா

## சரஸ்வதி தாயே



சரஸ்வதி தாயே சரஸ்வதி தாயே
உலகெல்லாம் கொண்டாடும் சரஸ்வதி தாயே
சக்தி மகா சக்தியே சகலகலா வல்லியே
அகிலமெல்லாம் ஆளுகிற சரஸ்வதி தாயே
சிவலோக நாயகியே சபை ஏற்றும் தேவியே
எண்ணமெல்லாம் நிறைந்தவளே சரஸ்வதி தாயே
ஊர் அறிய உன்புகழைப் பாடி வந்தோமே
உன்னை நம்பித் தெய்வம் என்று போற்றி வந்தோமே

மு. துளசிகேசன், சாவகச்சேரி இந்துக்கல்லூரி

## எழுதாமறை போற்றும் சரஸ்வதி

வெள்ளையுடை உடுத்தவெள் மேனியாள்
அம்புயமுகத் தனில் கயல்விழி இரண்டுடையாள்
வெண்முத்துமா லையணிந்து வெண்தாமரை
பூவிலிருப் பாள்தாமரை யான்தாரம்
கண்கண்ட கல்வித் தெய்வமவள்
கலைஞர் போற்றும் கலைமகள்
எண்ணு மெழுத்து மானவள்
எழுதாமறை போற்றும் சரஸ்வதி



பா. பாலச்சந்திரன், மயிலணி.

# திறைசேரியின் செயலாளராக மீண்டும் பதவி வகிக்க ஜெயசுந்தரவுக்கு அனுமதி

(கொழும்பு)

திறைசேரியின் செயலாளராக மீண்டும் பதவி வகிப்பதற்கு முன்னாள் செயலாளர் பி.பி.ஜெய சுந்தரவுக்கு உயர்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியுள்ளது.

பிரதம நீதியரசர் அசோக டிசில்வா தலைமையில் நீதியரசர் களான சிராணி பண்டாரநாயக்க, சிராணி திலகவர்த்தன, சலீம் மர்ஹூக், பால பட்டபெந்தி, கே.சிறிபுவன, பி.ஏ.ரட்னநாயக்க ஆகியோர் கொண்ட குழு முன்னிலையில் நேற்று முன்தினம் பி.பி.ஜெயசுந்தரவின் அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்தத் தீர்ப்பு வழங்கப் பட்டது.

பெரும்பான்மையான நீதியரசர்களின் ஆதரவுடன் இத் தீர்ப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை கப்பல் சேவை கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்தியமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவில் பி.பி.ஜெய சுந்தரவை குற்றவாளியாக கண்ட உயர்நீதிமன்றம் அவரை அரச சேவையில் இருந்துவிலகுமாறும் அது குறித்து அறிவிப்பினை வழங்குமாறும் உத்தரவிட்டிருந்தது.

இதற்கிணங்க கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 16 ஆம்திகதி உயர்நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த சத்தியக் கடதாசி மீளப்பெறுவதற்கு அனுமதிக்க வேண்டும் எனக்கோரி இவர் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவில் திறைசேரியின் செயலராளராக மீண்டும் தன்னை பதவியேற்குமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளதாகவும் இதனால் நீதிமன்றின் உத்தரவுக்கமைய தான் சமர்ப்பித்த சத்தியக்கடதாசி யினை மீளப் பெற அனுமதிக்க வேண்டுமெனவும் அவர் கோரியிருந்தார்.

இந்த மனு கடந்த சில மாதங்களாக விசாரிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கப் பட்டது. ஏழு நீதியசரசர்களில் ஆறு பேர் பி.பி.ஜெயசுந்தர சமர்ப்பித்த சத்தியக் கடதாசியினை மீளப்பெறுவதற்கும் மீண்டும் அவர் அரசாங்க சேவையில் இணைந்து கொள்வதற்கும் அனுமதியளித்தனர். (ஓ-6)

# உள்ளூராட்சி மன்ற சட்டத்தில் திருத்தம்

மாநகர சபை , நகர சபை மற்றும் பிரதேச சபை ஆகியவை தொடர்பான சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் சமர்ப்பித்திருந்தார்.

மக்களுக்கு மேலும் நன்மை பயக்கக்கூடிய வகையில் மேலே குறிப்பிடப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களை அதிகாரமிக்கதாக மாற்றியமைக்க இதன் மூலம் எதிர்பார்க்கப் படுகிறது. (ஓ-6)

# உலகுக்கு உணவளித்த உத்தமர்

## நோர்மன் போர்லாக்

பஞ்சம் பட்டினியால் முழு உலகமுமே தவித்துக் கொண்டிருந்த வேளையின் தனது முழு முயற்சியினால் பசுமைப் புரட்சியின் மூலமாக முழு உலகுக்குமே உணவு கொடுத்த



உலக பசுமைப் புரட்சியின் தந்தை
கலாநிதி நோர்மன் போர்லாக்

பசுமைப் புரட்சியின் தந்தை கலாநிதி நோர்மன் போர்லாக் தனது 95 ஆவது வயதில் இம்மாதம் 12 ஆம் திகதி சனிக்கிழமை அன்று இரவு 11 மணிக்கு மரணமானார். சாகும் வரை வறிய மக்களையும் அவர்களுக்கு உணவு கொடுப்பதைப் பற்றியுமே சிந்தித்து செயலாற்றிய பெருந்தகை எம்மைவிட்டுப் பிரிந் தது அனைத்துலகுக்குமே பேரிழப்பாகும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 9-XV

பசுமைப் புரட்சியின் தந்தை என வருணிக்கப்பட்டாலும் இவர் "பசுமைப் புரட்சி" என்ற பதத்தை இறுதிவரை விரும்பியிருக்கவில்லை. இவரது தீர்க்கமான வேளாண் ஆய்வு கொள்கைகள் மூலமாக பஞ்சம் பட்டினியால் வாடி வதங்கிய பல நாடுகள் மீளுயிர்ப்பு பெற்றனவென்றால் மிகையாகாது. அசுர வேகத்தில் பல்கிப் பெருகிக் கொண்டிருக்கும் மக்கள் தொகைக்கு உணவளிப்பதே இவரது ஒரேயொரு குறிக்கோளாக இருந்தது.

அமெரிக்க வேளாண் விஞ்ஞானியான போர்லாக் 1970 ஆம் ஆண்டு பட்டினியிலிருந்து உலகைக் காப்பாற்றியமைக்காக நோபல் பரிசு பெற்றார். வேளாண்மைக்கு என இதுவரையில் எவருக்குமே நோபல் பரிசு இவரைத்தவிர வழங்கப்பட்டதில்லை.

உலகளாவிய ரீதியில் உணவுக்கு என பயிரிடப்படும் பயிர்களில் விளைச்சலை அதிகரிப்பதற்காக அரும்பாடு பட்டார். இதன் மூலம் பல மில்லியன் மக்களை இறப்பிலிருந்து காப்பாற்றிய பெருமைக்குரியவராவர். அவருடன் இருந்த நண்பர்களுக்கு 95 வயது இளைஞனாகவே அவர் காணப்பட்டார். தொடர்ச்சியாக தன்னையே அர்ப்பணித்து வேளாண் வேலைத் திட்டங்களில் தன்னுடைய முழு நேரத்தையுமே செலவழித்த நல்லதொரு மாண்புடைய மனிதராவர்.

அமெரிக்காவில் டல்லாஸ் என்ற இடத்தில் வதியும் போதும் கூட டெக்சாஸ் A மற்றும் M பல்கலைக்கழகத்தில் அவருடைய பெயரில் உருவாக்கப்பட்ட கல்விச் சாலையிலே வேளாண் மாணவர்களுக்கு கல்வி கற்பித்துக் கொண்டிருந்தார். இறுதிவரை கல்வி ஆசானாகவும் அவர் இருந்து பல மாணவர்களில் தனது சிந்தனைகளை ஊறவைத்திருக்கின்றார்.

சென்ற மார்ச் மாதத்தில் தனது 95 ஆவது பிறந்த நாளையே கொண்டாடியபோது உலக உணவுற்பத்தியை இன்னும் எவ்வாறு பெருக்க முடியுமென்ற சிந்தனையிலேயே அவர் இருந்ததாகவும் அது பற்றியே அனைவருடனும் பேசியதாகவும் அறியக்கூடியதாயுள்ளது. ஒவ்வொரு வருடமும் ஏறத்தாழ 84 மில்லியன் மக்களை இணைத்துக் கொள்கிறோம். இவர்களுக்கு உணவு உற்பத்தி செய்யும் கடமை எங்கள் எல்லோர் முன்னிலையிலும் உள்ளது என்பதனை அனைவருக்கும் ஞாபக மூட்டினார்.

இறுதி காலகட்டத்தில் ஆபிரிக்காவில் வேகமாக பரவிவரும் புதியதொரு கோதுமை தண்டு துரு நோய் (Wheat Stem Rust disease) பற்றி மிகவும் ஆழ்ந்த கவலை கொண்டிருந்தார்.

அதனை தடுத்து நிறுத்த ஆய்வுகளை முடுக்கிவிடுமாறும் கேட்டுக் கொண்டார். கோதுமையிலேயே நிறைய ஆய்வுகளை செய்து அதன் விளைச்சலை பலமடங்காக உயர்த்திக் காட்டினார். இவரது அதிகரித்த விளைச்சல் பெறும் கொள்கைகளுக்கு சூழலியலாளர்களிடமிருந்து எதிர்ப்புக்களும் குறை கூறுவதும் உருவாகின.

ஆனாலும் வெற்றிகரமான முறைகளைப் பயன்படுத்தினாலும் இம்மாதிரியான அதிகரித்த விளைச்சலைத் தரக்கூடிய தொழில்நுட்பம் இல்லாதிருந்ததால் தன்னுடைய ஆய்வு முறைகளை முழுக்க முழுக்க நம்பியிருந்தார்.

செல்வந்தர்களுக்கு உணவு என அவரது கொள்கைகள் இருக்கவில்லை மாறாக வறிய மக்களுக்கு எவ்வாறு உணவு கொடுப்பது என்பதிலேயே அவரது எண்ணம், குறிக்கோள், சிந்தனைகள் இருந் தன. 1914 ஆம் ஆண்டு ஐயோவா மாகாணத் தின் மத்திய மேற்கு பிரதேசத்தில் பிறந்து தனது வேளாண் கல்வியை மினசொட்டா பல்கலைக்கழக வேளாண் கல்லூரியில் கற்றார். கற்கும் போதே சிந்தித்தார்.

1944களில் உலக சனத்தொகை அதிகரிப்பைப்பற்றி பல விஞ்ஞா னிகள் கவலை தெரிவித் ததும் பலர் உணவின்றி பட்டினிச் சாவினால் இறக்க வேண்டியிருப்பதையும் அறிந்ததும் போர்லாக்கினது சிந்தனையைத் தட்டியெழுப்பிய காரணிகள் எனக் கூறலாம். வல்லரசு நாடொன்றில் வசதிகள் பலவற்றுடன் பிறந்தும் அவருடைய வாழ்க்கைக் காலம் விளை நிலத்திலேயே கழிந்தது என்பதுதான் நாம னைவரும் அறிந்திருக்க வேண்டிய படிப்பினையாகும்.

1944களில் றொக்பெல்லர் நிறுவனத்தின் வேளாண் திட்டங்களில் மெக்சிக்கோவில் நடாத்தப்பட்டவற்றில் தன்னையும் இணைத்து கோதுமையில் விளைச்சலை மேம்படுத்துவுதற்கான துறையில் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார். தூய திருந்திய இனங்களை உற்பத்தி செய்வதே இவரது நோக்கமாக வேலையாக இருந்தது.

1957 ஆம் ஆண்டு மெக்சிக்கோவில் உற்பத்தி செய்யப்பட்ட கோதுமையின் விளைச்சலை ஒரு கெக்டருக்கு இரட்டிப்பாக மாற்றிக் காட்டினார். இந்த பெறுபேறுகள் அவரை தொடர்ந்தும் மெக்சிக்கோவிலுள்ள உலகளாவிய கோதுமை மற்றும் சோளத்திற்கான அபிவிருத்தி நிறுவனத்தில் பணிபுரிய வழி சமைத்தன.

தனக்குக் கிடைத்த அனைத்து வாய்ப்புக்களையும் சரிவர பயன்படுத்த போர்லாக் தவறியதேயில்லை. தொடர்ச்சியான இவரது ஆய்வு முயற்சிகள் 1960களில் பசுமைப் புரட்சிக்கு வித்திட்டன என்றால் மிகையாகாது.

அவரது வினைத்திறனானதும் ஆக்கபூர்வமானதுமான முயற்சிகள் அனைத்தும் பசுமைப் புரட்சியை உலகளாவிய ரீதியில் பட்டி தொட்டி எங்கும் எடுத்துச் செல்லப்பட்டது. ஏழை எளிய வறுமையில் வாடி வதங்கிய மக்களுக்கு ஒருவேளை உணவையேனும் கொடுக்கக் கூடியளவிற்கு புரட்சியொன்றையே செய்து



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

காட்டியதை பார்த்து உலகமே வியந்தது.

உண்பதற்கு உணவு கொடுத்தவரை உலகம் பாராட்டியது. மக்களுடன் மக்களாக தன்னை இணைத்துக் கொண்டு ஆய்வு களை முன்னெடுத்துச் சென்றார்.

இதற்காக 1977 ஆம் ஆண்டில் இவருக்கு அமெரிக்காவின் உயரிய சிவிலியன்களை கௌரவிப்பதான சுதந்திரத்துக்கான ஜனாதிபதி பதக்கம் வழங்கப்பட்டது. தொடர்ந்து 2007 ஆம் ஆண்டு காங்கிரஸ் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டது. விருதுகள் போர்லாக்கிற்கு வழங்கப்பட்டன என்பதைவிட போர்லாக்கினால் விருதுகள் மேன்மையடைந்தன எனலாம்.

(தொடரும்)

# யாழ். மாவட்டத்தில் பழமரச் செய்கையும் பயன்தரு மரங்களின் செய்கையினை ஊக்குவித்தலும்

**யாழ்.** மாவட்டத்தில் கடந்த வருடம் ஏற்பட்ட நிஷா புயல் மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக பழமரங்கள், மற்றும் பயன்தரு மரங்கள் போன்றன பெருமளவில் பாதிப்புக்குள்ளாகின. இதன் தாக்கம் காரணமாக எதிர்காலத்தில் 22617 மெற்றிக் தொன் உற்பத்தி இழப்பு ஏற்படுமெனவும், இதன் பெறுமதி ரூபா 428.5 மில்லியன் ஆகவும் மதிப்பிடப்பட்டது.

அத்துடன் கூடுதலான மற்றைய பயன்தரு மரங்களும் கடும் காற்றின் தாக்கத்தினால் வேரோடு சாய்ந்துள்ளன. இந்த நிலையிலிருந்து மீள்வதற்கும், பழமரங்கள் மற்றும் வனமரங்களின் விஸ்தீரணத்தை அதிகரிப்பதற்குமாக தேச நிர்மாண மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சினால் கமநெகும அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இவற்றின் மீள்நடுகை ஊக்கிவிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கான திட்டங்கள் அரசாங்க அதிபரின் முயற்சியினால் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கையும் வழங்கப்பட்டுள்ள கன்றுகளின் எண்ணிக்கையும்

| இல. | பிரதேச செயலகம் | பழமரச் செய்கையை ஊக்குவித்தல் திட்டம் | | மரநடுகைத் திட்டம் | |
|---|---|---|---|---|---|
| | | பயனாளிகள் எண்ணிக்கை | கன்றுகளின் எண்ணிக்கை | பயனாளிகள் எண்ணிக்கை | கன்றுகளின் எண்ணிக்கை |
| 01 | பருத்தித்துறை | 125 | 875 | 175 | 1400 |
| 02 | கரவெட்டி | 125 | 1625 | 175 | 1925 |
| 03 | மருதங்கேணி | 125 | 875 | 75 | 525 |
| 04 | உடுவில் | 125 | 875 | 125 | 875 |
| 05 | சண்டிலிப்பாய் | 125 | 1625 | 200 | 1400 |
| 06 | தெல்லிப்பளை | -- | -- | 175 | 1400 |
| 07 | சங்கானை | 125 | 875 | 200 | 2800 |
| 08 | யாழ்ப்பாணம் | -- | -- | 50 | 400 |
| 09 | நல்லூர் | 125 | 1625 | 125 | 1000 |
| 10 | கோப்பாய் | 250 | 2250 | 20 | 80 |
| 11 | ஊர்காவற்றுறை | 125 | 875 | -- | -- |
| 12 | வேலணை | 125 | 875 | 100 | 700 |
| 13 | நெடுந்தீவு | -- | -- | 75 | 525 |
| 14 | காரைநகர் | 125 | 875 | 75 | 1250 |
| 15 | சாவகச்சேரி | -- | -- | 105 | 525 |
| | மொத்தம் | 1500 | 13250 | 1625 | 14605 |

பழமரச் செய்கையை ஊக்குவித்தல் திட்டத்திற்கு ரூபா 1.2 மில்லியனும், மரநடுகை திட்டத்திற்கு ரூபா 1.29 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

திட்டத்தின் கீழ் 11 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து 1500 பயனாளிகள் பழமரச் செய்கைக்கும், 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து 1625 பயனாளிகள் மரநடுகைக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

பழமரச் செய்கை திட்டத்தில் மாதுளை, கொய்யா, பப்பாசி போன்ற பழமரக்கன்றுகளும், மரநடுகைத் திட்டத்தில் ஜம்பு, சமண்டலை, தென்னை, பலா, சண்டி, மாதுளை, கமுகு, சவுக்கு, கொய்யா, மா, எலுமிச்சை போன்ற கன்றுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பழமரக் கன்றுகளும், வனமரக் கன்றுகளும் தனியார் நாற்று மேடையாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு

திரு. க. தனபாலசிங்கம்
திருமதி கவிதா ஜெயசீலன்
பாடவிதான உத்தியோகத்தர்கள்
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) அலுவலகம்
யாழ்ப்பாணம்.

பார்ஊர்தி மூலம் ஒவ்வொரு விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளிலுமுள்ள தெரிவு செய்யப்பட்ட இடங்களிற்கு கொண்டு செல்லப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

(தொடரும்)

தன் குற்றங்களைச் சுட்டிக்காட்டினால் ஏற்றுக் கொண்டு தன்னை மாற்றிக் கொள்ள முயல்பவனே முன்னுக்கு வர முடியும்.

– ஓர் அறிஞர்

வலம்புரி

## சர்வதேச அழுத்தத்தால் திண்டாடும் இலங்கை அரசு

யுத்தம் நடந்த காலத்தில் இலங்கை அரசு எதிர்கொள்ளாத சர்வதேச அழுத்தத்தை இப்போது எதிர்கொள்ளும் நிலையில் இருப்பது மறுக்க முடியாத உண்மை.

யுத்தம் நடந்தபோது பயங்கரவாதிகளின் செயலென சர்வதேசத்திடம் கூற முடிந்தது. ஆனால் இப்போது யுத்தம் முடிந்து விட்டது.

எனினும் சுமார் மூன்று இலட்சம் மக்கள் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இலங்கை அரசின் இச் செயல் சர்வதேச ரீதியில் இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி விட்டது.

யுத்தத்தில் வென்று விட்டோம் என அரசு புகழாரம் சூடிக் கொண்டாலும், மூன்று இலட்சம் மக்களை முகாம்களில் அடைத்து வைத்தமை இந்த நாட்டின் வரலாற்றில் வேதனையான பக்கமாகும்.

இது எதிர்கால அரசியல் சுமுகநிலைக்குக் குந்தகமாக அமையலாம் என்பதை நிராகரிக்க முடியாது. நடந்து முடிந்த யுத்தமும் அதனால் பொதுமக்கள் சந்தித்த இழப்புகளும் இருண்ட வரலாற்றின் பக்கங்கள் என்ற வெறும் வார்த்தையுடன் நிலைமைகள் சுமுகமடையும் என யாரேனும் கருதுவார்களாயின் அது மிகப் பெரும் தவறாகும்.

ஏனெனில் யுத்தம் நடந்து கொண்டிருந்த போது, தமிழ் மக்கள் பேரழிவை சந்தித்தபோதெல்லாம் மௌனித்திருந்த ஐ.நா. சபை உட்பட உலக நாடுகள் தற்போது இலங்கை அரசின் போக்கைக் கடுமையாக விமர்சிக்கின்றன.

இலங்கை அரசின் பிரதிநிதிகள் உலக நாடுகளின் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல் திண்டாடுகின்றனர். ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனைத் தவிர ஐ.நா. அமைப்பில் பணியாற்றும் அத்தனை பேரும் முகாமில் அடைபட்டுள்ள மக்களின் துன்ப துயரங்களை நன்குணர்ந்துள்ளனர்.

அதேநேரம் அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, பிரான்ஸ், ஜேர்மன் போன்ற நாடுகள் இலங்கை வெளிவிவகார அமைச்சரிடம் ஈழத் தமிழர் தொடர்பில் தமது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளன.

அந்த நாடுகளின் வெறுப்பைச் சமாளிக்க எத்தனையோ காரணங்கள் முன்வைக்கப்பட்டாலும், அதனைச் சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை.

ஆக, இலங்கை சிறிய நாடு என்ற கோதாவில் சர்வதேச சமூகம் விட்டுக் கொடுத்ததை இலங்கை அரசு பலவீனமாகக் கருதி விட்டது. இதனால் எப்படியும் நடந்து கொள்ளலாம் என்ற நினைப்பும் செயலும் இப்போது இலங்கைக்கு இழுக்கைத் தேடித் தந்துள்ளது.

கிரந்தம் முற்றிப் பௌந்திரமாக்கும் நிலையில் சர்வதேசத்தைச் சமாளிப்பதென்பது இலங்கை அரசினால் முடியாத விடயமாகவே அமையும்.

# மக்களை விடுவிப்பதாக கூறி வேறு முகாமுக்கு மாற்றும் நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும்

## இரா. சம்பந்தன் வலியுறுத்து

(கொழும்பு)

வவுனியா இடைத்தங்கல் முகாமில் தங்கியிருக்கும் மக்களில் சுமார் 35 ஆயிரம் பேரை மீள்குடியேற்றம் செய்வதாக அங்கிருந்து வெளியே கொண்டு சென்ற இலங்கை அரசானது யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் அமைந்துள்ள வேறு முகாம்களில் அவர்களை அடைத்து வைத்திருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் குற்றம் சாட்டியுள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களை அவர்கள் முன்னர் எங்கு இருந்தார்களோ அந்த இடங்களிலேயே கொண்டு சென்று குடியமர்த்த வேண்டும் என வலியுறுத்திய சம்பந்தன், அவர்களை விடுதலை செய்வதாகக் கூறி ஒரு முகாமில் இருந்து மற்றொரு முகாமுக்கு மாற்றும் செயற்பாடுகளை அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் இணையத்தளம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் வலியுறுத்தியிருக்கின்றார்.

வவுனியா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 35 ஆயிரம் தமிழர்கள் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் உள்ள முகாம்களுக்கு மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக தமக்கு தகவல் கிடைத்திருப்பதாகத் தெரிவித்த இரா. சம்பந்தன் இவ்வாறு ஒரு முகாமில் இருந்து மற்றொரு முகாமுக்கு அகதிகளை இடமாற்றம் செய்வதால் அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கண்டுவிட முடியாது எனவும் குறிப்பிட்டார்.

இடம்பெயர்ந்த மக்களின் உறவினர்கள் முகாம்களுக்குச் செல்வதற்கான அனுமதியை வழங்குவது என அரசு எடுத்துள்ள தீர்மானத்தை வரவேற்றுள்ள அவர் 2 ஆயிரம் பேர் முகாம்களில் உள்ள தமது சொந்தங்களை வெளியே கொண்டு செல்வதற்கு முன்வந்திருப்பதையிட்டும் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இதேவேளையில் வவுனியா முகாம்களில் வைக்கப்பட்டிருந்தவர்களில் சுமார் 40 ஆயிரம் பேர் தமது சொந்தப் பகுதிகளில் குடியேற்றப்பட்டுள்ளதாக இலங்கையின் அமைச்சரவைப் பேச்சாளர் அநுர பிரியதர்சன யாப்பா நேற்று முன்தினம் வியா ழக்கிழமை தெரிவித்தார். கடந்த சில வாரங்களில் இவர்கள் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளையில் வவுனியா முகாம்களில் இருந்து மீள் குடியேற்றத்துக்காக என அவர்களின் சொந்த மாவட்டங்களுக்கு அழைத்து வரப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் விடுதலை செய்யப்படாமல் தொடர்ந்தும் வேறு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை அரச அதிகாரிகள் பலரும் உறுதிப்படுத்தியிருக்கின்றார்கள். (ஓ-6)

# அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் பேரவை மாநாடு ;

## ஐ.தே.க முன்னெடுப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியும் ஊழல் மோசடிகளை எதிர்த்தும் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு விஹாரமகா தேவி பூங்கா திறந்த வெளியரங்கில் மக்கள் பேரவை மாநாடு நடைபெறவுள்ளதாக ஐ.தே.கவின் செயலாளரும் எம்.பி.யுமான திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா காலம் தொடக்கம் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் தலைதூக்கும் காலங்களில் ஐ.தே. கட்சி மக்கள் பேரவை மாநாடுகள், பாத யாத்திரைகளை நடத்தி மக்களின் எதிர்ப்புக்களை வெளியிட்டு ஜனநாயக விரோத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தியுள்ளது. இலங்கையில் முதன் முறையாக கண்டியிலிருந்து கொழும்புக்கு எட்டு நாள் பாதயாத்திரையை நாம் நடத்தியுள்ளோம். இவ்வாறான மக்கள் பேரவைகளின் போது எமது ஆதரவாளர்கள் இருவரைப் பலி கொடுத்தோம். தாக்குதலுக்கும் உள்ளானோம்.

2005 ஆம் ஆண்டு நாட்டின் பல்வேறு திசைகளில் இருந்தும் கொழும்புக்கு 10 இலட்சத்திற்கும் மேலான மக்களை ஒன்று திரட்டி அரசாங்கத்திற்கு எதிர்ப்பை வெளியிட்டோம். இதன்போது பாரிய நெருக்கடிகளை சந்தித்த போதும் எமது எதிர்ப்பை கைவிடவில்லை. நாளை கொழும்பில் நடத்தப்படவுள்ள மக்கள் பேரவை மாநாட்டில் தேர்தல் மத்திய நிலையங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 10 ஆயிரம் பேர் கலந்து கொள்கின்றனர்.

நாடு முழுதும் இன்று ஜனாதிபதி மாளிகைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. அலரி மாளிகை அன்னதான மடமாக மாறிவிட்டது. மக்களின் பணம் கொள்ளையடிக்கப்பட்டு வீண் விரயம் செய்யப்படுகின்றது. அரசாங்கத்திற்குச் சொந்தமான தங்கத்தை விற்றுத் தீர்க்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. மனித உரிமைகள் மீறப்படுகின்றன. இவ்வாறான மக்களுக்கு எதிரான ஆட்சியை வீட்டுக்கு அனுப்பி மக்கள் ஆட்சியை நிறுவ வேண்டும்.

சட்டம் மற்றும் ஒழுங்கு நிலைநாட்டப்பட வேண்டும். அதற்கான ஆரம்பமே மக்கள் பேரவை மாநாடு. இதில் நட்புக் கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொள்கின்றனர் என்றார். (ஓ-6)

## மீனவர்கள் விடுதலையாகியும் தொடரும் வேலை நிறுத்தம்

(இராமேஸ்வரம்)

மீனவர்கள் விடுதலையானாலும் இலங் கை கடற்படை தாக்குதல் நடவடிக் கை யை நிறுத்தும் வரை மீன்பிடிக்க செல்ல வாய்ப்பு இல்லை என மீனவர் பிரதிநிதிகள் தெரிவித் ததால் இராமேஸ்வரம் மீனவர் களின் வேலை நிறுத்தம் மேலும் தொடர்கிறது.

இலங்கை சிறையில் இருந்து தமிழக மீனவர்கள் 21 பேர் நேற்று முன்தினம் காலை விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இராமேஸ் வரம் தாசில்தார் அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை ராமநாதபுரம் ஆர்.டி ஓ இளங்கோவன் தலைமையில் மீனவர் பிரதிநிதிகளின்கூட்டம் நடந்தது .

இக்கூட்டத்தில் சிறையில் இருந்த 21 மீனவர்கள் விடுதலை செய்யப் பட்டதால் வேலை நிறுத்தத்தை கைவிட்டு மீன்பிடிக்க செல்ல அதிகாரிகள் கூறினர். மீனவர்களுக்கு பாதுகாப்பற்ற நிலை உள்ளதால் இலங்கை கடற்படையினர் தாக்குவதை நிறுத்தும் வரை மீன்பிடிக்க செல்ல வாய்ப்பில்லை என மீனவ பிரதி நிதிகள் தெரிவித்தனர் .

மேலும் இராமேஸ்வரம் கடல் பகுதியில் மீன் பிடிக்க முடியாத நிலையில் புதிய இடங்களில் துறைமுகம் மீன்பிடி துறைமுகம் அமைத்தும் மற்ற கடலோர மாவட்டங்களில் உள்ள மீன்பிடித் துறைமுகங் களில் தங்கி மீன்பிடி தொழில் செய்யும் வகையில் இராமேஸ்வரம் படகுகளுக்கு அனுமதி வழங்கினால் மீனவர்கள் கடலுக்கு செல்ல வாய்ப்பு உள்ளது என்றும் தெரிவித்தனர்.

பேச்சு வார்த்தையில் எந்த முடிபும் எடுக்கப்படாத நிலையில் மீனவர்களின் கோரிக்கைகளை அரசுக்குபரிந்துரை செய்ய அதிகாரிகள்முடிபு செய்துள்ளனர். நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தினை தொடந்து வேலை நிறுத்தம் தொடரும் என மீனவர் சங்க பிரதிநிதிகள் அறிவித்தனர். (ஓ-6)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## நம்பிக்கையும் வலிமையும்



எழுந்து நின்று போராடு. ஓர் அடியும் பின்வாங்கக் கூடாது. கருத்து இதுதான் – எது வந்தாலும் போராடி முடி. தங்கள் நிலையிலிருந்து நட்சத்திரங்கள் பிறழட்டும். முழு உலகம் நமக்கு எதிராக எழுந்து எதிர்த்து நிற்கட்டும். மரணம் என்றால் வேறு உடை மாற்றுவதுதான். அதனால் என்ன போயிற்று? இப்படிப் போராடு. கோழையாவதனால் நீ எந்த ஒரு பயனையும் பெறமாட்டாய். ஓர் அடி நீ பின்வாங்குவதனால் எந்த ஒரு துரதிஷ்டத்தையும் தவிர்த்து விட முடியாது.

உலகிலுள்ள அத்தனை கடவுள்களையும் நீ கூவியழைத்துப் பார்த்தாகிவிட்டது. துன்பம் அதனால் ஓய்ந்து விட்டதா? நீவெற்றி பெற்றபோது கடவுளர் உனக்கு உதவ முன்வந்தார்கள். அதனால் என்ன பயன்? போராடி முடி. நீ எல்லையற்றவன் ; மரணமற்றவன் ; பிறப்பற்றவன். எல்லையற்ற ஆத்மா ஆதலால் , நீ அடிமையாக இருப்பது உனக்கு பொருந்தாது. எழுந்திரு! விழித்துக் கொள்! எழுந்து நின்று போராடு.

### பருவநிலை மாற்றத்தால்

# இமய மலை உருகுகின்றது பனிக்கரடிகள் பலியாகின்றன

## உலக தலைவர்கள் மத்தியில் இந்திய சிறுமி உரை



(புதுடில்லி)

பருவநிலை மாற்றத்தால் உலகின் வெப்பநிலை அதிகரித்து இமய மலை உருகுகின்றது. பனிக்கரடிகள் பலியாகின்றன என 13 வயது இந்தியச் சிறுமி யுக் ரத்னா ஸ்ரீவத்சவா ஐ.நா வில் உரையாற்றியுள்ளார். பருவநிலை மாற்றம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை ஏற்பாடு செய்துள்ள உச்சி மாநாடு அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்த மாநாட்டில் உலகெங்கும் உள்ள 300 கோடி குழந்தைகள் சார்பில் இச் சிறுமி பேசியுள்ளார். இவர் உ.பி.தலைநகர் லக்னோவில் உள்ள பாடசாலையொன்றில் 9 ஆம் வகுப்பு படித்து வருகின்றார். இவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில், ஐந்து பேரில் இருவருக்கு சுத்தமான குடிநீர் கிடைப்பதில்லை. அதேநேரத்தில், பசுபிக் பெருங் கடலின் நீர்மட்டம் அதிகரித்தபடி உள்ளது. பருவநிலை மாற்றத்தைத் தடுக்க உடனடி நடவடிக்கை தேவை நமக்காக இல்லாவிட்டாலும் வருங்கால சந்ததிக்காகவாவது உலகைக் காக்க வேண்டியது நம் கடமை என்றார்.

சிறுமியின் உரையைஅமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, சீன ஜனாதிபதி ஜு ஜின்டோ உள்ளிட்ட 100 உலக தலைவர்கள் கேட்டனர். (ஓ-6)

### ஐ.நா.பாதுகாப்புச் சபையில்

# அணு ஆயுதப் பரவலைத் தடுக்கும் தீர்மானம் நிறைவேற்றம்

உலக மட்டத்தில் அணு ஆயுதப் பரவலை தடுக்கவும், ஆயுதக் களைவின் மூலம் அணு சக்தி சார்ந்த தீவிரவாதத்தைக் குறைக்கும் முகமான நடவடிக்கைகளை எடுக்கும் ஒரு தீர் மானம் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பாதுகாப்பு சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

அணு ஆயுதமற்ற ஒரு உலகை உருவாக்க அனைவரிடமும் இருக்கும் ஒரு அர்ப்பணிப்பு இந்தத் தீர்மானத்தின் மூலம் தெரிகிறது என்று இந்தக் கூட்டத்துக்கு தலைமையேற்ற அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா கூறியுள்ளார்.

சிக்லான முடிச்சுக்களை அவிழ்க்கும் ஒரு இலட்சியத்தை நோக்கிய பயணத்தில் அனைவருக்கும் ஒரு பங்கிருப்பதை சுட்டிக் காட்டிய ரஷ்ய அதிபர் டிமிட்ரி மெட்வடேவ், தம் நாட்டிடம் இருக்கும் அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் ஏவுகணைகளை மூன்றில் இரண்டு பங்குக்கும் கூடுதலாகக் குறைக்க தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஈரானின் அணுத்திட்டம் தொடர்பாக அதன் மீது கூடுதல் அழுத்தங்களைப் பிரயோகிக்கும் ஒரு நடவடிக்கையாக, இந்தக் கூட்டம் பார்க்கப்படுகிறது என்றாலும் ஈரான் மீது கூடுதலாக எந்தத் தடையையும் விதிப்பதற்கு சீனா தனது எதிர்ப்பை மீண்டும் தெரிவித்துள்ளது. (ஓ-6)

# 35 ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்த சகோதரர்கள் ஒன்று சேர்ந்தனர்

அமெரிக்காவைச் சேர்ந்தவர் கேரி நிஸ்பட். இவர் ஒரு தளபாட கடையில் கடந்த 7 ஆண்டுகளாக வேலை செய்து வந்தார் . இதே கடையில் புதிதாக ராண்டி ஜோபர்ட் வேலைக் குச் சேர்ந்தார். இவர்கள் இருவரும் பார்ப்ப தற்கு ஒரே மாதிரி இருந்ததால் சகோதரர்களா என்று பார்ப்பவர்கள் கேட்பதுண்டு. அப்போது எல்லாம் அதை அவர்கள் மறுத்து வந்தனர்.

ஆனால் அவர்கள் சகோதரர்கள் தான் என்பது சமீபத்தில் தெரியவந்தது. பிறப்புச் சான்றுகளை சமீபத்தில் பார்க்கும் வாய்ப்பு ராண்டிக்கு கிடைத்தது. அப்போது தான் தன்னைப் பெற்றவர்கள் என்று தான் நினைத்து இருந்தவர்கள் தன் வளர்ப்பு பெற்றோர் என்பதும் தன் பெற்றோர் தன்னை வளர்க்காமல் தத்துக்கொடுத்ததும் தெரியவந்தது. புள்ளி விபர அதிகாரிகள் மூலம் தனக்கு ஒரு சகோதரன் இருப்பதும் ராண்டிக்கு தெரியவந்தது. தன் சகோதரன் யார்? அவர் எங்கே இருக்கிறார் என்பதையும் அவர் விசாரித்த போது தான் தான்வேலைபார்க்கும் கடையில் தன்னுடன் வேலைசெய்யும் கேரிதான் தன் சகோதரன் என்பதும் தெரியவந்தது. அவர்கள் குழந்தையாக இருந்தபோதே அவர்கள் பெற்றோர் அவர்களை வேறு வேறு நபர்களுக்கு தத்துக்கொடுத்து விட்டனர். அவர்கள் வேறு வேறு பள்ளிக்கூடங்களில் படித்தனர் . பக்கத்து பக்கத்து நகரங்களில் வசித்தனர். ஆகிய விபரங்களும் அவர்களுக்கு பின்னர் தான் தெரியவந்தது . (ஓ-6)

# தலிபான்களை அழிப்பதற்காக பாகிஸ்தானுக்கு உலக நாடுகள் உதவி

(நியூயோர்க் )

கடந்த 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் திகதி அமெரிக்காவில் இரட்டை கோபுரம் மீது அல்கொய்தா தீவிரவாதிகள் விமானங்களை மோதி தாக்குதல் நடத்தினார்கள்.

இதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் பதுங்கியிருந்த அல்கொய்தா தீவிர வாதிகளையும் தலிபான்களையும் அமெரிக்க இராணுவம் வேட்டையாடியது.

இவர்களின் வசம் இருந்த ஆப்கானிஸ்தானை கடந்த 2001 ஆம் ஆண்டில் அமெரிக்க படைகள் மீட்டனர். தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகின்றன.

அதை சமாளிக்க முடியாத தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் இருந்து அதை ஒட்டியுள்ள பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியான வாஸிரிஸ்தானுக்குள் பதுங்கினர்.

அப்பகுதியை ஆக்கிரமித்து தனி அரசை ஏற்படுத்தினர். இது பாகிஸ்தானுக்கு தலைவலியை ஏற்படுத்தியது.

எனவே தலிபான் களை அழிக்க அமெரிக்காவின் உதவியை பாகிஸ்தான் நாடியது.

எனவே அமெரிக்க படைகள் தாக்குதல் நடத்தி தீவிரவாதிகளை அழித்து வருகிறது. இதற்கிடையே பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இதனால் பாகிஸ்தானில் பொருளாதார சீரழிவு ஏற்பட்டுள்ளது. வளர்ச்சி பணிகள் நடைபெறவில்லை.

எனவே இதை சமாளிக்க பாகிஸ்தானுக்கு அமெரிக்கா , இங்கிலாந்து அவுஸ்திரேலியா ,கனடா, துருக்கி, பிரான்ஸ் தென்கொரியா உள்ளிட்ட 12க்கும் மேற்பட்ட நாடுகள் உதவி செய்ய முன்வந்துள்ளன. (ஓ-6)




# எய்ட்ஸுக்கு தடுப்பு மருந்து ; தாய்லாந்தில் கண்டுபிடிப்பு

தாய்லாந்தில் உள்ள தொற்று நோய் தடுப்பு ஆராய்ச்சி மையம் எய்ட்ஸ் நோய்க்கு தடுப்பு மருந்தைக்கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டது. இப்போது இந்த விஞ்ஞானிகள் தடுப்பு மருந்து ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

இதை உட்கொண்டவர்களுக்கு எய்ட்ஸ் நோய் கிருமி பரவாமல் தடுக்கிறது. 16 ஆயிரம் பேருக்கு இந்த மருந்தைக்கொடுத்து சோதனை நடத்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு எய்ட்ஸ் கிருமி தொந்தரவில்லை .

எய்ட்ஸ்சைத் தடுக்க இதுவரை எந்த மருந்தும் கண்டுபிடிக்கவில்லை. தடுப்பு மருந்து இப்போது தான் முதல் தடவையாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி இந்த மையத்தின் இயக்குநர் அந்தோணி பவுசி கூறுகையில் இந்த தடுப்பு மருந்து மூலம் மருந்துவப்புரட்சி ஏற்படும் .

இதற்கு மேலும் வீரியத்தை ஏற்படுத்தி சிறப்பான மருந்தாக உருவாக்கப்படும். புதிய மருந்தை இன்னும் பல்வேறு கட்ட ஆய்வுகளுக்கு அனுப்பி அதன் பின்னரே மக்களுக்கு பயன்படுத்துவார்கள் என்று தெரிவித்தார். (ஓ-6)

# கார்களை பயன்படுத்துவதை கைவிட்டு பஸ்களில் பயணம் செய்யுங்கள்

## இளவரசர் சார்ள்ஸ் கோரிக்கை

(லண்டன்)

உலக் வெப்பமயமாதலுக்கு காரணமாக இருப்பது தொழிற்சாலைகளிலும் கார்களிலும் இருந்து வெளியேறும் காபன் புகை தான். இதைக்குறைப்பது பூமியைக் காப்பாற்றுவதற்கு அவசியமான ஒன்றாகும். இதற்காக மக்கள் கார்களை பயன்படுத்து வதை கைவிட்டு பஸ்களில் பயணம் செய்ய வேண்டும் என்று இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவரிடம் 2 ஜாகுவார்கள் 2 ஆடிகார்கள் ஒரு ரேஞ்ரோவர் த ஆஸ்டன் மார்டின் ஆகிய கார்கள் உள்ளன. இதில் மார்டின் கார் அவரது இருபத்தொராவது பிறந்த நாளுக்காக அவரது தாயார் ராணி எலிசபேத் அவருக்கு பரிசளித்த காராகும் இதில் தான் அவர் அதிகம் பயணம் செய்கிறார். (ஓ-6)



# ஜி-20 மாநாட்டை எதிர்த்து அமெரிக்காவில் வன்முறை ;

ஜி-20 நாடுகளின் மாநாடு நேற்று அமெரிக்காவில் உள்ள பிட்ஸ்பர்க் நகரில் தொடங்கியது.இதில் அமெரிக்க அதிபர் ஒபாமா இந்திய பிரதமர் மன்மோகன்சிங் உள்ளிட்ட தலை வர்கள் கலந்து கொண்டனர்.

இந்த மாநாடு உலக சமத்துவத்துக்கு எதிரானது என்று கூறி ஒரு பிரிவினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.அவர்களில் நூற்றுக் கணக்கானோர் பிட்ஸ்பர்க் நகரில் கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பின்னர் மாநாடு நடந்த மண்டபத்தை நோக்கி செல்ல முயன்றனர்.அவர்களைப் பொலிஸார் தடுத்தனர்.

இதனால் போராட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டனர்.அருகில் இருந்த கட்டிடங்கள் மீது பொருட்களை வீசி தாக்கினார்கள். பொலீஸ் வாகனங்கள் தாக்கப்பட்டன. இதனால் பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசினார்கள்.ஆனால் நிலைமை கட்டுக்குள் வரவில்லை.எனவே இறப்பர் குண்டுகள் மூலம் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள்.அதன் பின்னர் போராட்டக்காரர்கள் கலைந்து ஓடினார்கள்.19 பேரை பொலிஸார் கைது செய்தனர். (ஓ-6)

# பாம்பு கடித்ததால் பாதியில் கைவிடப்பட்ட சாதனை முயற்சி

(லண்டன்)

நச்சுப்பாம்புகளுடன் ஒரு கூண்டுக்குள் வாழ்ந்து சாதனை படைக்க விரும்பினார் ஜோக்கான்ஸ் ஸ்வார்ட். இவர் நல்ல பாம்புகள் உட்பட 40 விஷப்பாம்புகளை ஒரு கூண்டுக்குள் அடைத்து அதற்குள் அந்த பாம்புகளுடன் தங்கி சாதணை படைக்கப்போவதாக அறிவித்திருந்தார். 36 நாட்கள் அந்தக் கூண்டுக்குள் தங்கியிருந்த அவரை மறுநாள் நச்சுப்பாம்பு ஒன்று கால் விரலில்கடித்து விட்டது. இதனால் அவரை ஆஸ்பத்திரியில் சேர்த்து பாம்பு கடித்த இடத்தில் சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என்று டாக்டர்கள் தெரிவித்தனர்.

உடனடியாக சிகிச்சை அளிக்கப் படாவிட்டால் அவருக்கு மாரடைப்பு ஏற்படலாம் என்றும் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்றும் எச்சரித்திருக்கிறார்கள் இதைத் தொடர்ந்து அவர் தம் சாதனை முயற்சியை பாதியிலே கைவிட்டார். (ஓ-6)

## தேசிய மட்ட தடகளப் போட்டிகளில்

# கோலூன்றிப் பாய்தலில் அருணோதயாவுக்கு 3-வது தங்கம்; தட்டெறிதலில் ஹாட்லிக் கல்லூரி மாணவனுக்கு முதலிடம்

(கொழும்பு)

தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகளில் கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவனும் தட்டெறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவனும் தங்கப் பதக்கத்தை வென்றனர்.

2009 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகள் கொழும்பு சுகதாச விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று நடைபெற்ற 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவன் மகாதேவன் திருவரன் 3.40 மீற்றர் உயரம் பாய்ந்து முதலிடத்தைப் பிடித்து தங்கப் பதக்கத்தை வென்றார்.

இதேபோட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் மற்றொரு மாணவன் குணரட்ணம் றெக்னோ அனோஜன்3.25 மீற்றர் உயரம் பாய்ந்து 2 ஆம் இடத்தைப் பிடித்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

இதன்மூலம் இம்முறை தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகளில் கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி 3 தங்கப் பதக்கங்களையும் ஒரு `வெள்ளிப் பதக்கத்தையும் இரண்டு நிற விருதையும் பெற்று யாழ்.மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது.

அத்துடன் நேற்று நடைபெற்ற ஆயிரத்து 500 மீ. ஓட்டப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவன் பத்மநாதன் பிரதீபன் 6 ஆம் இடத்தைப் பிடித்தார். இப் போட்டியில் தேசிய ரீதியில் 36 வீரர்கள் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

**தட்டெறிதலில் ஹாட்லி மாணவன் தங்கம் வென்றார்**

தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற 19 வயது ஆண்கள் பிரிவுக்கான தட்டெறிதல் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் வடிவேஸ்வரன் அரிகரன் 42.67 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தை வென்றார். அத்துடன் சிறந்த செயற்பாட்டுக்காக அரிகரனுக்கு நிற விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதேவேளை தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகளில் யாழ்.மாவட்டப் பாடசாலை வீரர்கள் இதுவரை 4 தங்கம், ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கங்களை வென்று அசத்தியுள்ளனர். (5,27)

# யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் போர்


ஜொலிஸ்ரார்ஸ்


சென்றலைட்ஸ்

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் நாளை யாழ். ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அணியும் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதுகின்றன.

இலங்கை கிரிக்கெட் சபையின் அனுமதியுடன் யாழ்.மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கழக கிரிக்கெட் அணிகளுக்கிடையில் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் மூன்றாவது கிரிக்கெட் தொடர் ஈஸ்ற் வெஸ்ற் மார்க்கெட்டிங் பிறைவேற் லிமிட்டெட்டின் அனுசரணையுடன் நடைபெற்று வந்தது.

யாழ்.மாவட்டத்திலுள்ள 17 கிரிக்கெட் அணிகள் பங்குபற்றிய இக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நாளை யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிக்குப் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கை நெறிகள் பீட பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் கலந்து சிறப்பிப்பதுடன் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி முதல்வர் வண.பிதா எம்.ஜேறோ செல்வநாயகம், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி ஆகியோர் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்கின்றனர்.


## பொலிஸ் சேவை ஆட்சேர்ப்பு

**ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்**

**பொலிஸ் கொன்ஸ்ரபில் / Police Constable**

**அடிப்படைத் தகைமைகள் - ஆண் ( திருமணமாகாதவர்)**

வயதெல்லை :- 18 - 28

கல்வித்தகைமை:- க.பொ.த. (சா/த) பரீட்சையில் தாய்மொழி, கணிதம் அடங்கலாக இரு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது ஆறு பாடங்கள் சித்தியடைந்திருக்க வேண்டும். இரு தடவையில் சித்தியெய்தியவர்கள் முதல் தடவையில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

உயரம் :- 5 அடி 4 அங்குலம்

மார்பு :- 30 அங்குலம் (மூச்சு விட்ட நிலையில்)

**அடிப்படைத் தகைமைகள் - பெண் ( திருமணமாகாதவர்)**

வயதெல்லை :- 18 - 28

கல்வித்தகைமை:- க.பொ.த. (சா/த) பரீட்சையில் தாய்மொழி, கணிதம் அடங்கலாக இரு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது ஆறு பாடங்கள் சித்தியடைந்திருக்க வேண்டும். இரு தடவையில் சித்தியெய்தியவர்கள் முதல் தடவையில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

உயரம் :- 5 அடி 2 அங்குலம்

**பொலிஸ் கொன்ஸ்ரபில் சாரதி / Police Constable Driver**

**அடிப்படைத் தகைமைகள் - ஆண் ( திருமணமாகாதவர்)**

வயதெல்லை :- 19 - 28

கல்வித்தகைமை:- க.பொ.த. (சா/த) பரீட்சையில் தாய்மொழி, கணிதம் அடங்கலாக இரு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது ஆறு பாடங்கள் சித்தியடைந்திருக்க வேண்டும். இரு தடவையில் சித்தியெய்தியவர்கள் முதல் தடவையில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். சாரதி அனுமதிப் பத்திரம் ஒருவருட பூர்த்தியை கொண்டிருத்தல் வேண்டும்.

உயரம் :- 5 அடி 3 அங்குலம்

மார்பு :- 30 அங்குலம் (மூச்சு விட்ட நிலையில்)

குறிப்பு :- கிராம சேவகரின் உறுதிப்படுத்தப்பட்ட நற்சான்றிதழ், கல்வித்தகைமைக்கான சான்றிதழும், பிறப்புச் சான்றிதழும் மூலப்பிரதிகளுடன் 2 போட்டோப் பிரதிகளும் கொண்டு வரவும்

2X 2 1/2 அளவிலான கறுப்பு வெள்ளைப் புகைப்படம் -2, பேனா-1, அரைக்காற்சட்டை / ஸ்க்கேட், தேசிய அடையாள அட்டை, விளையாட்டுச் சான்றிதழ்களின் மூலப்பிரதியுடன் நகல் பிரதிகளும் கொண்டு வருதல் வேண்டும்.

நேர்முகத் தேர்வு :-

காலம் - 28.09.2009 நேரம் - 8.00 (a.m)

இடம் - 01. துரையப்பா விளையாட்டரங்கு, 02. ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையம், 03. சாவகச்சேரி பொலிஸ் நிலையம், 04. தெல்லிப்பழை பொலிஸ் நிலையம், 05. பருத்தித்துறை பொலிஸ் நிலையம்.

❖ இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் நேர்முகத்தேர்வில் விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்று விண்ணப்பத்தை நிரப்பி நேரில் சமர்ப்பிக்கலாம்.

பொலிஸ் அத்தியட்சகர்,
யாழ்ப்பாணம்.

(c-3381)


# யாழ்.மாவட்ட ஹொக்கி அணி களுத்துறை அணியை வீழ்த்தியது

(கொழும்பு)

தேசிய ஹொக்கிப் போட்டித் தொடரில் யாழ்.மாவட்ட ஹொக்கி அணி 5:0 என்ற கணக்கில் களுத்துறை மாவட்டஅணியை வீழ்த்தியது.

இலங்கை ஹொக்கி சம்மேளனத்தினால் நடத்தப்படும் 53-வது தேசிய ஹொக்கி சுற்றுப் போட்டி மாத்தளையில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று நடைபெற்ற போட்டியில் யாழ்.மாவட்ட ஹொக்கி அணி, களுத்துறை மாவட்ட ஹொக்கி அணியைச் சந்தித்தது. இப் போட்டியில் யாழ்.மாவட்ட ஹொக்கி அணி ஆரம்பம் முதலே சிறப்பாக விளையாடியது.

இதில் யாழ்.மாவட்ட ஹொக்கி அணி இடைவேளைக்கு முன் மூன்று கோல்களையும் இடைவேளைக்குப் பின் இரண்டு கோல்களையும் அடித்து 5:0 என்ற கணக்கில் களுத்துறை மாவட்ட அணியை வீழ்த்தியது.

இப் போட்டியில் யாழ்.மாவட்ட ஹொக்கி அணி சார்பாக இராஜேஸ்வரன் இரண்டு கோல்களையும் நிஷாந்தன், சுகிர்தன் மற்றும் லக்ஷ்மன் ஆகியோர் தலா ஒரு கோலையும் அடித்து அசத்தினர்.

இதேவேளை நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் யாழ்.மாவட்ட அணி 0:8 என்ற கோல்கணக்கில் கொழும்பு அணியிடம் தோல்வியடைந்தது.

## இது யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில்...



யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தின் உட்பகுதியிலிருந்த கிணறு ஒன்று சுமார் 35 வருடங்களுக்கு முன் கொங்கிறீட் போட்டு மூடப்பட்டு அதற்கு மேல் மண்ணால் மூடப்பட்டு இருந்துள்ளது.

நேற்று முன்தினமிரவு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பாடநூல்களை ஏற்றி வந்த லொறி இக்கிணற்றுக்கு மேற் பகுதியால் சென்றுள்ளது.

இதனால் கொங்கிறீட் உடைந்து கிணறு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இக் கிணறு இருப்பது யாழ்.இந்துக் கல்லூரியில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கும் தெரியாது என கல்லூரி அதிபர் வீ.கணேசராசா தெரிவித்தார்.

## புலிகள் இணைவதை...

தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை சுமார் இருபத்தைந்து வருடங் களுக்குப் பின்னர் அபிவிருத்தி அடைந்து வரும் நிலையில் எதிர்நோக்கும் சவாலானது பொது மக்களின் தரத்தை உயர்த்துவதாகும்.சமூக நிலையை நோக்கி நகரும் இலங்கை தற்சமயம் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறது என்றார். இந்த மாநாட்டில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில், இலங்கையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஆதரவுவழங்கப்படும்எனதெரிவித்தஅவர், எப்படி இருந்த போதிலும் முகாம்களின் அமை திக்கு பங்கம் ஏற்படுத்த முனையும் பட்சத்தில் அவர்களு க்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (ந-14)

## வவுனியா...

108 பேர் நேற்று குடியமர்த் தப்பட்டனர் என காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஜெயசீலன் தெரிவித்தார்.

அத்துடன் 36குடும்பங்களைச் சேர்ந்த 143 பேர் ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனவும் அம்மக்களும் அவர்களின் சொந்த இடங்களில் நேற்று குடியமர்த்தப்பட்டார் கள் என அவர் குறிப்பிட்டார். (ந-5,14)


## நியூ சிற்றி றேடேர்ஸ் இடமாற்றம்

வீட்டு மின் இணைப்புக்கு தேவையான சகலவிதமான பொருட்களையும் (வயர் ,மெயின் வயர் ,ஏத் வயர்) சுவுரை, மேசை ஸ்ராண்ட், மின் விசிறிகளையும் சார்ச் லைற், சார்ச் ரோச், சப்பிளைசர் (500, 1000, 1500, 3000 W), கிறைண்டர், ரோஸ்டர், ரைஸ் குக்கர், பிறைசர் குக்கர், கொட் பிளேட், அயன், கேத்தல், காஸ் குக்கர், மண்ணெண்ணெய் குக்கர், வாட்டர் கீற்றர் ஆகிய பொருட்களை நிதான விலையில் பெற்றுக் கொள்ளவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்.

நியூ சிற்றி றேடர்ஸ்,
319 A, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
T.P.:- 021 222 3226
(C-3363)



## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து



இன்று கொழும்பில் பிறந்தநாளை வெகு விமர்சையாக கொண்டாடும் திரு. திருமதி கஜந்தன் அமலாதம்பதியினரின் அருந் தவப்புதல்வன் செல்வன் க.மிதுன் (மிது குட்டி) அவர்களை இந்நன்நாளில்வாழ்த்துவதோடு எங்கள் அன்புச் செல்வம் சகல செல்வங்களும் பெற்று நல முடன் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

(C-3375) —மாமாமார்கள்


# உரிய நேரத்தில் பிரபாகரன் வருவார் டில்லியில் வைகோ தெரிவிப்பு

(புதுடில்லி)

விடுதலைப் புலிகளின் சகாப்தம் ஒரு போதும் முடிந்து விடப்போவதில்லை. அவர்கள் மீண்டும் போர்க்களம் புகுவார்கள் எனத் தெரிவித்துள்ள ம.தி.மு.க.பொதுச் செயலர் வைகோ அந்தப் போர்க்களத்தை நடத்த உரியநேரத்தில் பிரபாகரன் வருவார் என குறிப்பிட்டார்.

இலங்கையில் முகாம்களில் அடைக் கப் பட்டுள்ள தமிழ் மக்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தும் வகையில் இந்தப் பிரச்சினையில் சர்வதேச நாடுகள் தலையிட வேண்டுமென்று வலியுறுத்தி புதுடில்லியில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற கருத்தரங்கில் தலைமைதாங்கி உரைநிகழ்த்திய போதே வைகோ இதனைத் தெரிவித்தார்.

இக் கருத்தரங்கினை டில்லி மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. இதில் பழ நெடுமாறன் உள்ளிட்ட தமிழ் உணர்வாளர்கள் கலந்து கொண்டு உரைநிகழ்த் தினர்.

கருத்தரங்கில் உரையாற்றிய வைகோ மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களின் பூர்வீக தாயகத்தில் அவர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்த மண்ணில் சிங்களவர்களைக் குடியேற்றி தமிழ் இனத்தை அழிக்கவேண்டும் என்ற காரணத்தினால் தான் மூன்று இலட்சம் பேரை முள்வேலி முகாம்களிலே அடைத்து வைத்திருக்கிறார்கள். இது இந்திய அரசிற்குத் தெரியாதா?

இலங்கை அரசு யுத்தத்தில் வெற்றி பெற வேண்டும் என்று இந்தியா திட்டமிட்டு உதவி செய்தது. அதனால்தான் போர்நிறுத்தம் வேண்டும் என்று ஒரு வார்த்தைக்காகக் கூட கடைசிவரை சொல்லவில்லை. முகாம்களில் உள்ளவர்கள் மீட்டெடுக் கப்பட்டு அவர்கள் தங்கள் சொந்த வீடுகளில் பூர்வீக மண்ணில் குடியமர்த்தப்படவேண்டும் இவற்றைச் செய்வதற்குசர்வதேசநாடுகள்தலையிடவேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ந-14)

## இலவச...

வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் டபிள்யூ.என்.புஷ் மகுமார வின் வழிகாட் டலில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்குத் தேவையான ஒரு தொகுதி இலவசப் பாட நூல்கள் எடுத்துவரப்பட்டுள்ள தாகவும் எதிர்வரும் நவம்பர் முதல் வாரத்தில் பாட நூல்கள் முழுமையாக அனுப்பி வைக்கப் படுமெனவும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள தமிழ்ப் பிரிவு பிரதி ஆணையாளர் லெனின் மதிவாணன் தெரிவித்தார். (ந-5)

## யாழ்ப்பாணத்...

நடவடிக்கைகளுக் கும் இலகுவாக அமையும் என அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வவுனியா நலன்புரி முகாம்களில் தற்போது தங்க வைக்கப்பட்டுள்ள சுமார் 45 ஆயிரம் பேர் யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் அமைக்கப்படவுள்ள இடைத்தங்கல் முகாம்களில் மீளவும் தங்க வைக்கப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி பருவப் பெயர்ச்சி மழைக் காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் பெருந்தொகையாக அகதிகளை வேறு இடங்களில் தங்கவைப் பது தொடர்பில் அரசாங்கம் முனைப்புடன் செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (ந-5)


## SARAVANA TEX
### சரவணா புடவையகம்

தீபாவளியை முன்னிட்டு நியாயமான விலையில்

NEW Selections



இந்தியன் சாறிகள் சீக்குன்ஸ் சாறி, திரட் வேக்சாறி, கொட்டன்சாறி, ரூசுசாறி, சாறி பஞ்சாபி துணிசில்க், பஞ்சாபிகொட்டன் துணி, ரெடிமேற் பஞ்சாபி மற்றும் ஸ்கேட் & பிளவுஸ், T. சேட், சேட், வேட்டி மற்றும் ரெடிமேற் ஆடைகள் சாறி பிளவுஸ் துணி சகல கலர்களிலும் மிகமிக குறைவான விலைகளில் உள்ளது.

01 பஞ்சாபி துணிசில்க் 1150/=
(Special Quality GURU KURUPA)

குறிப்பு (தீபாவளியை முன்னிட்டு ஏழு நாட்களும் கடைதிறந்திருக்கும்)

சரவணா புடவையகம் இல.526, பருத்தித்துறை வீதி, சிவன் கோவில் அருகாமை, நல்லூர், யாழ்ப்பாணம். (C-3376)






# வேலை வாய்ப்பு

இணையுங்கள் உங்கள் வாழ்க்கையை வெற்றியாக்க!



இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான **யூனியன் அஷ்யூரன்ஸ்** யாழ்.மாவட்ட கிளைக்கு பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கவுள்ளது.







## பதவி வெற்றிடங்கள்

| | |
|---|---|
| பதவி - 1 | காப்புறுதி ஆலோசகர் |
| பதவி - 2 | தனிப்பட்டோர் நிதி ஆலோசகர் |
| பதவி - 3 | சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி ஆலோசகர் |
| பதவி - 4 | தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் |
| பதவி - 5 | சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் |
| பதவி - 6 | முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| பதவி - 7 | உதவி முகவர் அபிவிருத்தி முகாமையாளர் |
| பதவி - 8 | முகவர் அபிவிருத்தி முகாமையாளர் |
| பதவி - 9 | சிரேஷ்ட முகவர் அபிவிருத்தி முகாமையாளர் |







அடிப்படைத் தகைமைகள் :- க.பொ.த. (சா/த), க.பொ.த.(உ/த), வியாபாரத் துறையில் முன்னனுபவம் உள்ளவர்கள், காப்புறுதித் துறையில் முன்னனுபவம் உள்ளவர்கள், கல்வித் தகைமையுடன் விளையாட்டுத் துறையில் திறமையுள்ளவர்கள், தற்போது A/L பரீட்சைக்குத் தோற்றிய வர்கள் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றலாம். நன்மைகள் :- நிரந்தர அடிப்படைச் சம்பளத்துடனான வேலை வாய்ப்பு (பதவி 6,7,8,9) , பயிற்சிக் காலத்தின் போது மேலதிக ஊக்குவிப்புக் கொடுப்பனவும் வழங்கப்படும்.

**தகைமையுடன் உங்களிடம் நாம் எதிர்பார்ப்பது?**

- உங்களது இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை
- உங்கள் வெற்றியை நோக்கி பணிபுரிவதற்கான ஆர்வம்
- திடசித்தம்

**ஏன் தயக்கம்; தோற்றுங்கள் நேர்முகத் தேர்வுக்கு சுயவிபரக் கோவையுடன்**

நேர்முகத் தேர்வு
காலம் :- திங்கட்கிழமை (28.09.2009)
நேரம் :- முற்பகல் 9.30 மணி
இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ்
139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C-3349)

**யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்**

தொடர்புகளுக்கு :- தொ.பே. 021 222 3753, 077 3039582 G.சிறீவரதன், அபிவிருத்தி முகாமையாளர்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.09.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.